Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

SATURDAY, OCTOBER 16, 2021

சனிக்கிழமை ஒக்டோபர் 16, 2021 | ஒளி: 07 கதிர்: 128 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE

## ஹைலண்ட் பால்மா அதிகரிப்பு; பெல்வத்த பால்மாவும் கூடியது




உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால் மா வகைகளின் விலைகள் நேற்று (15) முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதன்படி, ஹைலண்ட் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக மில்கோ தலைவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## இந்திய இராணுவ தளபதி திருமலைக்கு விஜயம்

■ எப்.முபாரக்

இந்திய இராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் முகுந் நரவானே(Manoj Mukund Naravane) திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்டார்.

திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவை அரசாங்க அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து நேற்று (15) கலந்துரையாடினார்.

இந்திய இராணுவத் தளபதியால் அரசாங்க அதிபருக்கு நினைவுப் பரிசில் வழங்கப்பட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபரும் இந்திய இராணுவ தளபதிக்கு நினைவுப் பரிசிலொன்றை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.





மாகாணங்களுக்கு இடையிலான

# பயணத்தடை கடுமையானது

- இன்னும் நான்கு நாள்களுக்கு நீடிப்பு
- மாகாண எல்லைகளை கண்காணிக்கப் பணிப்பு
- மாணவர்களுக்கு ஒரு டோஸ் ஏற்றப்படும்

தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை, இம்மாதம் 21ஆம் திகதி வியாழக்கிழமை வரை, கடுமையாகக் கடைபிடிக்கத் தீர்மானிக்கப்பட்டது. இம்மாதம் 19 மற்றும் 20ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக அமையப்பெற்று நீண்ட விடுமுறையுடன் கூடிய வார இறுதி அமையப்பெறவுள்ளமையால், தொடர்ச்சி P2

## ஐயப்பன் பக்தர்களுக்கு நவம்பர் முதல் விசா

இலங்கையிலிருந்து செல்லும் ஐயப்பன் பக்தர்களுக்கு நவம்பர் மாதம் முதல் விசா வழங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பதாக தெரிவிக்கப்பட்டது. தொடர்ச்சி P2



## ஏழு மூளைகள் இருந்தும் என்ன பயன்?



பொருளாதாரத்தில் அதிசயங்களைச் செய்யக்கூடிய ஏழு மூளைகளைக் கொண்டிருக்கும் ஒருவர் இருப்பதாகப் பெருமை பேசிய அரசாங்கம், இன்று வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்களை துன்பத்தில் ஆழ்த்தியுள்ளதென எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் எழுத்தாணை மனு:

## வசந்த கன்னாகொட, சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பு

சட்டமா அதிபர் மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட ஆகிய இருவருரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக அறிவித்தல் பிறப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (15) உத்தரவிட்டுள்ளது. தொடர்ச்சி P2



## முல்லைத்தீவில் 410 ரவைகள் மீட்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, அம்பலவன் பொக்கணை பகுதியில், ரி.56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தக்கூடிய 401 ரவைகளை வீட்டில் வைத்திருந்த 40 வயதான குடும்பஸ்தர் ஒருவரை முல்லைத்தீவு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கை… தொடர்ச்சி P2



## உரப் பிரச்சினையால் தேயிலை உற்பத்தி 30 சதவீதம் வீழ்ச்சி

### மாநாயக்கரிடம் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் எடுத்துரைப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

அசேதன பசளையை நிறுத்துவது நல்ல விடயம். ஆனால் அதனை உடனடியாக நிறுத்தியதால் சில பாதிப்புகள் வரலாம் எனத் தெரிவித்துள்ள இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், உரப் பிரச்சினையால் தேயிலை உற்பத்தி 30 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே, விவசாயிகள், தொழிலாளர்களை பாதுகாப்பதற்கான தீர்வு கிடைப்பது அவசியம் என்றார்.

தொடர்ச்சி P2




## சிறுமி துஷ்பிரயோகம் சித்தப்பாவுக்கு சிறை

■ மஹேஸ் கீர்த்திரத்ன

தனது மனைவியின் சகோதரியின் மகளுக்கு இனிப்பை வழங்கி, அச்சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய நபர் ஒருவருக்கு 30 வருட சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## மானம்பூ உற்சவம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் விஜயதசமி - மானம்பூ உற்சவம் நேற்று (15) காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் திருவிழா ஆரம்பமானது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, நல்லூரின் பண்டைய காலத்தில் உபயோகிக்கப்பட்ட பழைமையான சிறிய குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி அமைதியான முறையில் மானம்பூ உற்சவம் சிறப்பாக இடம்பெற்றது. (படங்கள்: எம். றொசாந்த் )

## ரஹ்மானை யூடியூபில் முந்தினார் யொஹானி

ஒஸ்கார் நாயகன் இசைப்புயல் ஏ.ஆர் ரஹ்மானை யூடியூபில் பின்தொடர்வோரின் எண்ணிக்கையை விட யொஹானியின் யூடியூபில் பின்தொடர்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அந்த வகையில் ஏ.ஆர். ரஹ்மானின் யூடியூபில் பின்தொடர்வோரின் எண்ணிக்கை 2.93 மில்லியனாக உள்ளது.

எனினும் யொஹானியின் யூடியூபில் பின்தொடர்வோரின் எண்ணிக்கை 2.97





## பசில் விடுவிப்பு

திவிநெகும நிதியத்தின் நிதியை மோசடி செய்தார்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இந்நாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்‌ஷ, நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் கித்சிறி ரணவக்க ஆகியோர் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## 20 கொரோனா மரணங்கள் பதிவு

நாட்டில் மேலும் 20 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என அரசாங்கத் தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தல்களுக்கு அமைய இந்தத் தகவல் தொடர்ச்சி P2

## ஆபத்தான நிலைமை ஏற்படும் அபாயம்



சுகாதார கட்டுப்பாடுகளின் கீழ் நாடு திறக்கப்பட்டுள்ள நிலையில், மக்கள் அதனை கண்டுக்கொள்ளவில்லை என்றால் ஆபத்தான நிலைமை ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

தொட்டலங்க எல்லே அணித்தலைவர் கொலை விவகாரம்:

## லெப்டினனண்ட் கேர்ணல் உள்ளிட்ட 15 பேருக்கும் விளக்கமறியல் நீடிப்பு

மட்டக்குளி பெண் கிராம உத்தியோகத்தரின் கணவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள மட்டக்குளி இராணுவ முகாமின் லெப்டினண்ட் கேர்ணல் உள்ளிட்ட 15 சந்தேகநபர்களுக்கும் ஒக்டோபர் 29ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

## வாகன இறக்குமதிக்கு புதிய யோசனை

இலங்கைக்கு வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில், அரசாங்கத்திற்கு யோசனை முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவிலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இலங்கை மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறான அறிவிப்பை விடுத்தார்.

வாகனங்களை இறக்குமதி செய்யும் போது, வெளிநாட்டு நாணயத்தை மாத்திரமே பயன்படுத்தி இறக்குமதி செய்யும் புதிய முறையை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

LK Newspaper Community

PAGE 1 தொடர்ச்சிகள்

## ஐயப்பன் பக்தர்களுக்கு...

ஐயப்பன் யாத்திரை மேற்கொள்ளவதில் உள்ள சவால்கள் குறித்து இந்து கலாசார திணைக்களத்தில் பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் இந்து கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் உமா மகேஷ்வரன், பிரதமரின் ஆன்மீக இணைப்பாளர் பாபு சர்மா ,அகில இலங்கை ஆனந்த ஐயப்ப தேவஸ்தானத்தின் செயலாளர் கணேஷமூர்த்தி, சபரிமலை ஒன்றிய குருக்கள் கே.ரவீந்திர குருசாமி மற்றும் ஐயப்ப குருசங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இலங்கையில் இருந்து இந்தியா செல்வதற்காக விசா வழங்கும் நடைமுறை தற்போது நிறுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் விசா வழங்குவதற்கான விசேட நடவடிக்கை எடுக்குமாறு செந்தில் தொண்டமானிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக இந்திய உதவி உயர்ஸ்தானிகளை தொடர்பு கொண்டு, விசா வழங்குவதற்கான தேவையான நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தார். கோரிக்கையை ஏற்று நவம்பர் மாதம் முதல் விசா வழங்குவற்கான ஏற்பாடுகள் முன்னெடுப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கேரளா மாநிலத்திற்கு விமான சேவை இயங்காத சூழ்நிலையில் சபரிமலை செல்வதற்கு தமிழகம் ஊடாக வெகுதூரம் சாலைவழியில் செல்ல வேண்டிய சூழ்நிலை இருப்பதால் மீண்டும் விமான சேவை ஆரம்பிப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

கொவிட் தொற்று கட்டுப்பாட்டில் இருக்கும் பட்சத்தில் கேரளா மாநிலத்தில் உள்ள திருவனந்தப்புரம் மற்றும் கொச்சின் ஆகிய இரண்டு விமானநிலையங்களுக்கும் ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் விமான சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என விமானத்துறை அமைச்சர், செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்துள்ளார் என செந்தில் தொண்டமானின் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுமி துஷ்பிரயோகம் சித்தப்பாவுக்கு...

சித்தப்பா முறையான குறித்த சந்தேகநபரை எதிராக மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. அந்த குற்றச்சாட்டுகளில் குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம் ஒவ்வொரு குற்றசாட்டுக்கும் தலா 10 வருடங்கள் என 30 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்து, மாத்தளை மேல்நீதிமன்றத்தின் நீதிபதி கலாநிதி சுமுது பிரேமசந்ர உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சிறைத்தண்டனை தீர்ப்பளிக்கப்பட்ட நபர், மாத்தளை- கலேவல, வலஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 30 வருட சிறைத்தண்டணைக்கு மேலதிகமாக, ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5,000 ரூபாயாக 15,000 ரூபாய் அபராதமும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 50,000 ரூபாய் நட்டஈட்டையும் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், 15,000 ரூபாய் அபராதபணம் செலுத்தாவிட்டால், 6 மாதங்களுக்கு தளர்த்தப்பட்ட வேலைகளுடன் கூடிய சிறைத்தண்டனையும் நட்டஈட்டை செலுத்தாவிடின் ஒரு வருட தளர்த்தப்பட்ட வேலைகளுடன் கூடிய தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுமிக்கு இனிப்பை வழங்கி, இவ்வாறு துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார் என சந்தேகநபருக்கு எதிராக கலேவல பொலிஸாரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி, நிரூபிக்கப்பட்டுள்ளதால் இத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## லெப்டினன்ட் கேர்ணல் உள்ளிட்ட 15 பேருக்கும்...

தொட்டலங்க எல்லே விளையாட்டு கழகத்தின் விளையாட்டு அணியின் தலைவரான 36 வயதான, மூன்று பிள்ளைகளின் தந்தையான அருண சம்பத் ரத்னசிறி என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில், மரணமடைந்த நபரின் மனைவியான கிராம அலுவலர், மட்டக்குளி இராணுவ முகாமின் இராணுவ லெப்டினன்ட் கேர்ணல் மற்றும் குறித்த முகாமிலுள்ள 13 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

பிரதான சந்தேகநபரான லெப்டினன்ட் கேர்ணலே இக்கொலையை திட்டமிட்டுள்ளதாக தெரிய வந்துள்ளதாக மட்டக்குளிய பொலிஸார் கடந்த செப்டெம்பர் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

மரணித்த நபரின் மனைவியின் தகாத உறவு காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மரணமடைந்த நபர் கடந்த ஒகஸ்ட் 17ஆம் திகதி இராணுவ முகாமுக்கு சொந்தமான கெப் வாகனமொன்றில் கடத்தப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து தனது கணவரைக் காணவில்லையென மட்டக்குளி - சமித்புர கிராம உத்தியோகத்தராகக் கடமையாற்றிவரும் அகில சம்பத்தின் மனைவி, பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், கடந்த ஒகஸ்ட் 20ஆம் திகதி முகத்துவாரம் - காக்கைத்தீவு கடற்கரையில் அடையாளம் தெரியாத சடலமொன்று மீட்கப்பட்டிருந்த நிலையில், அது பின்னர் எல்லே விளையாட்டு வீரரான அகில சம்பத்துடையது என அடையாளம் காணப்பட்டது.

சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக அவரது மனைவி முதலில் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட விசாரணையில், குறித்த இராணுவ அதிகாரி உள்ளிட்டோரால் தமது கணவர் கொலை செய்யப்பட்டதாக அவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து சம்பத்துடன் தொடர்புடைய 15 பேரும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

குறித்த நபர் கடத்தப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு, சேதவத்த கறுப்பு பாலத்திலிருந்து களனி கங்கையில் வீசப்பட்டமை விசாரணையில் தெரிய வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பயணத்தடை கடுமையானது

அனைத்து மாகாண எல்லைகளிலும் போக்குவரத்து நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளைத் தீவிரமாக முன்னெடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , பாதுகாப்புத் துறையினருக்குப் பணிப்புரை விடுத்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (15) முற்பகல், இடம்பெற்ற கொவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்ட பணிப்புரையை விடுத்தார்.

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 - 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், நேற்று (15) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் (Booster) தடுப்பூச்சியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 இலட்சம் ஃபைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்த கிடைத்துக்கொண்டு இருக்கின்றன என்றும், கொவிட் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

கொவிட் தொற்றுக்கு இலக்காகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையை மேலும் குறைத்துக் கொள்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும் தொற்றுக்கு இலக்காகும் நோயாளிகள் தற்போது கண்டறியப்படும் பிரதேசங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி, அவ்விடங்களைத் தனிமைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

கொவிட் ஒழிப்புக்காக சுகாதாரத் தரப்பினர் பின்பற்றிய வீட்டுத் தனிமைப்படுத்தல் வேலைத்திட்டமானது, உலக சுகாதார ஸ்தாபனத்தின் விசேட பாராட்டைப் பெற்றுள்ளது என, விசேட வைத்திய நிபுணர் அநுருத்த பாதெனிய கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தின் போது அறிவித்தார்.

## வசந்த கன்னாகொட, சட்டமா அதிபருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பு

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவிற்கு எதிராக விசேட மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையை வாபஸ் பெறுவதற்கு சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு கடந்த 13ஆம் திகதியன்று அறிவித்திருந்தார்.

அந்த நடவடிக்கையை சவாலுக்கு உட்படுத்தி, கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் நால்வரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று (15) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பில் வெள்ளை வேன்களை பயன்படுத்தி 11 இளைஞர்களை கடத்தி காணாமல் ஆக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் 14 ஆவது பிரதிவாதியான முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொடவுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை தொடர்ந்தும் முன்னகர்த்தப் போவதில்லையென சட்டமா அதிபர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கடந்த 13ஆம் திகதி அறிவித்திருந்தார்.

சட்டமா அதிபரின் குறித்த தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள குறித்த மனுவை எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் குழாம் நேற்று (15) தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க, வழக்கின் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சட்டமா அதிபர் மற்றும் வசந்த கரன்னாகொடவை எதிர்வரும் 29 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவித்தல் பிறப்பிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

## உரப் பிரச்சினையால்...

இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட குழுவினர் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரரை நேற்று (15) சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டனர். அதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இராஜாங்க

நாங்கள் மலையக மக்களின் காணிகளைப் பறிக்கிறோம் என எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் குற்றஞ்சுமத்துகிறார்கள். 10 வருடங்களாக ஆட்சியிலிருந்த அவர்கள் ஏன் காணிகளை மக்களுக்கு பகிர்ந்தளிக்காமல், 729 ஹெக்டேயர் காணிகளை தனியாருக்கு வழங்கினர் என கேள்வி எழுப்பிய அவர், தன்மீது சுமத்தப்படும் விமர்சனங்களால் அவர்கள் தொடர்பான உண்மை வெளியே வரும் என்றார். மேலும் அரச பெருந்தோட்ட யாக்கத்துக்கு கீழான பெருந்தோட்டங்களை பாற்பண்ணைகளை அமைக்க எடுக்கும் நடவடிக்கையில், அத்தோட்டங்களைச் சேர்ந்த 1,424 குடும்பங்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற விடயத்தில் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் என தெளிவான முடிவில் இ.தொ.கா உள்ளதென்றும் மாகாண சபைத் தேர்தல் நடத்த தாமதமானால், உள்ளூராட்சி தேர்தலும் நடத்தப்பட முடியாது.

தேர்தல் தொடர்பான சீர்திருத்த குழுவில் தானும் ஓர் அங்கத்தவன் என தெரிவித்த அவர், அதில் அனைத்து மலையக கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்படுகிறோம். தேர்தல் முறையில் மாற்றம் வந்தால், அது கட்டாயமாக மலையக மக்கள் இந்திய வம்சாவளி மக்களை மாத்திரமே பாதிக்கும். அதற்கு இடமளிக்க முடியாது.

## ஆபத்தான நிலைமை ஏற்படும்...

மக்கள் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் ஆபத்தான மற்றுமொரு கொவிட் அலை உருவாக கூடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் வைத்தியர் நவிந்த டி செய்ஸா தெரிவித்துள்ளார்.

நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான ஒரு படியாக கொவிட் சுகாதார வழிகாட்டுதல்கள் தளர்த்தப்பட்டுள்ளது. எப்படியிருப்பினும், சரியான கட்டுப்பாடு இல்லாமல் செய்தால் எதிர்வரும் நாட்களில் ஏற்படும் விளைவுகள் மோசமாக இருக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## பெசில் விடுவிப்பு

இவ்வாறு நிதியை மோசடி செய்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ் அவர்களுக்கு எதிராக 2015ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் இவ்விருவரும் நேற்று (15) விடுதலை செய்யப்பட்டனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, உள்ளூர் அதிகாரிகளுக்கு ஜி.எல் குழாய் வழங்குவதாக 36 மில்லியன் ரூபாய் அரச நிதிகளை மோசடி செய்ததாக பெசில் மற்றும் கித்சிறிக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

## 20 கொரோனா...

வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் (14) நாட்டில் மேலும் 20 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில் 30 வயதுக்கும் குறைந்த ஒரு மரணமும், 30 முதல் 59 வரையிலான வயதுடைய 5 மரணங்களும், 60 வயதுக்கும் மேற்பட்ட 14 மரணங்களும் பதிவாகியுள்ளன. உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 9 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

## வாகன இறக்குமதிக்கு புதிய...

"எனவே, முடிந்தால் வெளிநாட்டு நாணயத்தில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான திட்டம் எங்களிடம் உள்ளது.

வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த ஒரு முறையை உருவாக்க முடிந்தால், அந்நிய செலாவணி அதன் வழியாக நாட்டிற்கு கொண்டு வர முடியும்.

இது தொடர்பில் அரசாங்கத்திற்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்போம் என நம்புகின்றோம்" என ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹைலண்ட் பால்மா அதிகரிப்பு; பெல்வத்த பால்மாவும் கூடியது

அதற்கமைய, 400 கிராம் பால்மாவின் விலை 90 ரூபாயினாலும், ஒரு கிலோகிராம் பால்மா விலை 225 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஹைலண்ட் 400 கிராம் பால்மாவின் விலை 470 ரூபாயாகவும், ஒரு கிலோகிராம் பால்மாவின் விலை 1,170 ரூபாயாகவும் உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, பெல்வத்த நிறுவனமும் பால்மாவின் விலையை அதிகரித்துள்ளது. 400 கிராம் பால்மா விலை, தற்போது 460 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால்மா பொதியின் விலையை 250 ரூபாயினால் அதிகரிக்க கடந்த 9ஆம் திகதி பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு மூளைகள் இருந்தும் என்ன பயன்?

கெஸ்பேவ நகரில் நேற்று (15) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இன்று ஒவ்வொரு கிராமங்களிலும் ஒவ்வொரு வீடுகளிலும் வறுமை, பொருளாதார சிக்கல்கள் அதிகரித்துவந்தாலும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்திடம் எவ்வித திட்டங்களும் இல்லை என்றார்.

குண்டர்கள், நண்பர்கள், பாரிய மாபியாக்கள் இணைந்து நாட்டில் செயற்படுவதாகத் தெரிவித்த அவர், ஆனால் நாளுக்கு நாள் அரசாங்கம் மக்களை சிரமத்துக்குள்ளாக்கி வருகிறது என்றார்.

சிவில் உரிமைகள், பொருளாதார உரிமைகள், அரசியல் உரிமைகள், கலாசார உரிமைகள் உள்ளிட்ட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்பட்டாலும் இன்று நாட்டு மக்கள் அசௌகரியம் வறுமையால் அவதிப்படுகின்ற.

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(2) கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல். **க்ளாஸிடிஃ கார்டன்ஸ் (பிரைவட்) லிமிடட்** என்ற நிறுவனத்தின் பெயரை 2020 ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் மர்க்கன்டைல் **டீ ரொன்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிடட்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் **பீவீ 18175** மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 93, ஜோர்ஜ் ஆர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 13.

செயலாளர்கள்
கோர்ப்பரேட் லையாஸ் (பிரைவட்) லிமிடட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(2) கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல். **ஹெப்பி ஹொலிடேஸ் லங்கா (பிரைவட்) லிமிடட்** என்ற நிறுவனத்தின் பெயரை 2020 பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி முதல் **ஹெப்பி சொலூசன்ஸ் (பிரைவட்) லிமிடட்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் **பீவீ 84330** மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 35, எம் ஆர் சி, அபரகேஹூனந்த வீதி, மெலிசம, வாத்துவ.

செயலாளர்கள்
கோர்ப்பரேட் லையாஸ் (பிரைவட்) லிமிடட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(2) கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல். **டிஜிட்டல் ரீச் (பிரைவட்) லிமிடட்** என்ற நிறுவனத்தின் பெயரை 2021 ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி முதல் **பிரீஜ் அட்வைசரி அன்ட் கன்சல்டிங் (பிரைவட்) லிமிடட்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் **பீவீ 00210697** மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 40, புஷ்பா ஒழுங்கை, கொழும்பு 07.

செயலாளர்கள்
கோர்ப்பரேட் லையாஸ் (பிரைவட்) லிமிடட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(2) கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல். **மன்றாஸ் சோல்ட் லிமிடட்** என்ற நிறுவனத்தின் பெயரை 2021 ஜூன் மாதம் 21 ஆம் திகதி முதல் **நெஷனல் சோல்ட் லிமிடட்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் பீவீ 1078 மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 561/3, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05.

செயலாளர்கள்
கோர்ப்பரேட் லையாஸ் (பிரைவட்) லிமிடட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9(2) கீழ் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல். **பிங்க்சோல்ட் (பிரைவட்) லிமிடட்** என்ற நிறுவனத்தின் பெயரை 2021 ஜூலை மாதம் 06 ஆம் திகதி முதல் **லைசெல ஹொஸ்பிட்டலிட்டி (பிரைவட்) லிமிடட்** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட இலக்கம் பீவீ 00230063 மற்றும் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி இல. 129/7A, துவா வீதி, பெத்தேகான, பிடகோட்டே.

செயலாளர்கள்
கோர்ப்பரேட் லையாஸ் (பிரைவட்) லிமிடட்

LK Newspapers Viber Community

# உக்கிரமடையும் உரப் பிரச்சினை





மகேஸ்வரி விஜயனந்தன்
mayurisaai@gmail.com

**'என்ன வளம் இல்லை இந்தத் திரு நாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற கவிஞர் மருதகாசியின் பாடல் வரிகள் என்னவோ எமது இலங்கைக்கே எழுதியது போலுள்ளது. உண்மையில் அத்தனை வளங்கள் இருந்தும், ஒரு சட்டைப் பின்னுக்கு கூட ஏனைய நாடுகளிடம் கையேந்துவதால் தான், இன்று எமது நாடு பாரிய பொருளாதார சிக்கலில் சிக்கி சுழன்றுக்கொண்டிருக்கின்றது.**

அனைத்து வளங்களையும் கொண்டிருக்கும் நாம் இன்று சேதனப் பசளையைக் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள துர்ப்பாக்கியம்.

நாட்டின் எதிர்கால தலைவர்களான இளைஞர், யுவதிகள் இன்று நாட்டை விட்டுச் செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதை வெளிநாட்டு வேலைவாய்ப்பு திணைக்களம் மற்றும் குடிவரவு-குடியகல்வு திணைக்களத்தின் முன்பாக பல கிலோமீற்றர் தூரத்திலான வரிசைகள் பறைசாற்றுகின்றன.

30 வருட உள்நாட்டு யுத்த காலத்தில் கூட தமது உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து மாத்திரம் தான் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். ஆனால் இன்று முழு இலங்கையிலிருந்தும் தப்பி பிழைத்து ஓடுவதற்கு தயாராகிவிட்டனர்.

தினம் தினம் ஆகாயத்தை தொடும் அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம், கல்விக்கு அடிக்கப்பட்டுள்ள சாவுமணி, பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட இன்னோரன்ன காரணங்களால், எங்காவது சென்று பிழைத்துக்கொள்வோம் என சட்டரீதியாகவும் சட்டவிராதமாகவும் இலங்கையை விட்டு செல்கின்றனர்.

இந்நிலையில் , ஆண்டாண்டு காலமாக இந்த மண்ணில் விவசாயம் செய்து, முழு நாட்டுக்கும் உணவளித்த விவசாயி எங்கே போவான்? அவன் வாழ்ந்தாலும் இறந்தாலும் அவனுக்குச் சொந்தம் அவனது விவசாய நிலமே. இந்த விவசாயிகள் அண்மை சில நாள்களாக விடும் கண்ணீர், இன்னும் எத்தனை யுகங்களுக்கு இலங்கைக்கே சாபமாக அமைய போகிறதென தெரியவில்லை.

சுற்றுச்சூழலுக்கும் விலங்குகளுக்கும் பாதிப்பின்றி விவசாயத்தை முன்னெடுத்து வந்தாலும் 1960ஆம் ஆண்டு உலகில் ஏற்பட்ட பசுமை புரட்சியால் பாரம்பரிய விவசாயம் வர்த்தக விவசாயமாக மாறியது. அதாவது குறுகிய காலத்தில் பாரிய அறுவடையைப் பெறுவதே இந்த வர்த்தக விவசாயத்தின் நோக்கமாக அமைந்தது. கலப்பு விதைகளின் அறிமுகம், அசேதன





பசளைகளின் அறிமுகம், பூச்சிக்கொல்லிகள் இந்த வர்த்தக விவசாயத்தை பராமரிப்பதற்கான காரணியாக அமைந்தது.

இதற்கு இலங்கையும் விதிவிலக்கல்ல. இலங்கையிலும் தேயிலை, தென்னை, இறப்பர் உள்ளிட்ட பெருந்தோட்ட பயிர்செய்கை உள்ளிட்ட அனைத்து விவசாய உற்பத்திகளும் அசேதன பசளைக்கே அடிமையாகிவிட்டன.

விஷமென தெரிந்தும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உணவுகளுக்கு எமது நாக்குகளும் பழகிவிட்டன.

ஆனால் "ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த குடிமகனை உருவாக்க நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் "சுபீட்சத்தின் நோக்கு"கொள்கையின் கீழ், கடந்த ஜூலை மாதத்திலிருந்து அசேதன பசளை இறக்குமதிக்கு தடைவிதிக்கப்பட்டது.

முன்னேற்பாடான திட்டங்கள் எதுவுமின்றி தடைசெய்யப்பட்டதால், விவசாயிகள் வீதிக்கு இறங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இலங்கையில் 15 இலட்சம் ஹெக்டயர் விவசாய நிலங்கள் காணப்படுவதுடன், , தற்போது பயன்படுத்தப்படும் இரசாயன உரத்தில் 95 சதவீதம் இறக்குமதி செய்யப்படுவதுடன், இதற்காக கடந்தாண்டு 259 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளது.

உண்மையில் இந்த இறக்குமதி செலவு என்பது அதிகம் தான், எண்ணெய் விலை அதிகரிப்புடன், உர இறக்குமதி செலவானது, 300-400 மில்லியன் டொலர் வரை அதிகரிக்கும்.

அத்துடன், இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகரிக்க காரணமும் இந்த இரசாயன உரமே என சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி,இலங்கையில் சேதன பசளையை மாத்திரம் முழுமையாகப் பயன்படுத்தி விவசாயத்தை முன்னெடுக்கவும் அசேதன பசளை பயன்பாட்டை குறுகிய காலத்துக்குள் முற்றாக தடைசெய்யவுள்ளதாகவும் அறிவித்தார்.

இதனையடுத்து உலக நாடுகளின் கழிவுத்தொட்டியாக அண்மைய சில நாள்களாக மாறிவரும் இலங்கைக்கு, சீனாவின் நகர கழிவுகள் சேதனப் பசளை எனும் பெயரில் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டன.

இதற்கான மாதிரிகள் சீனாவிலிருந்து பெறப்பட்ட நிலையில், அந்த பசளை மாதிரிகளில் இலங்கையின் மண்வளத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அர்வீனியா எனப்படும் நுண்ணுயிர்கள் இருப்பது உறுதியானது.

சேதனப் பசளையை முழுமையாகப் பயன்படுத்தி விவசாயத்தில் தன்னிறைவை காணுதல் வாக்குறுதியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது விவசாயிகளின் கண்ணீரும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவின் கொடும்பாவி எரிப்பும் சான்று பகிர்கின்றது.

இந்த தடையானது பெருந்தோட்ட பயிர்செய்கையான தேயிலை, இறப்பருக்கும் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளதுடன், இதனால் தோட்டத் தொழிலாளர்களும் தோட்ட நிர்வாகங்களும் மோதிக்கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

தேயிலை உள்ளிட்ட விசேட வர்த்தகப் பயிர்செய்கைக்கு மாத்திரம் இரசாயன பசளை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கினாலும் டொலர் பிரச்சினையானது, அசேதன உர இறக்குமதியையும் பாதித்துள்ளது.

இந்த மாதம் 21 க்கு முன்னர், தமது உரப் பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் விவசாயிகள் கொழும்புக்கு படையெடுப்பர் என விவசாய சங்கங்கள் எச்சரித்துள்ளன. அப்படியொரு நிலைமை ஏற்படுமாயின் சற்றே தணிந்துள்ள கொரோனா, விவசாயிகளின் கொத்தணியாக மாறும் என்பதில் ஐயமில்லை.

விவசாயிகளின் சேதன பசளை தொடர்பான பாரிய எதிர்ப்புக்கு மத்தியில், முதற் தடவையாக லிதுவேனியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதன பசளையைப் பயன்படுத்தி ,பெரும்போகத்துக்கான பயிர் செய்கை நேற்று (15) 8 இலட்சம் ஹெக்டேயரில் உத்தியோகப்பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதியின் கொள்கை வரவேற்கத்தக்கது என்றாலும், பல ஆண்டுகளாக அசேதனப் பசளைக்கு பழகிவிட்ட எமது விவசாய நிலங்களில் உரிய முறைகளைப் பின்பற்றி சேதன பசளை பயிர்செய்கை முன்னெடுக்கப்படாவிடின் அது பாரிய பிரச்சினையை தோற்றுவிக்கும் என, இலங்கை மணல் சார் ஆய்வு சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளதை கவனத்திற்கொண்டு, செயற்பட்டால், விவசாயிகளின் சாபத்துக்கு ஆளாக வேண்டிய நிலை எவருக்கும் ஏற்படாது.



# நடந்தது என்ன?



ஆறுமுகம் ரமேஸ்.
ramesarumukam@gmail.com

என்னதான் கோபகாரர்களாக இருந்தாலும் ஆபத்து ஏற்படும் போது ஓடோடி வந்துவிடுவர். ஆனால், ஓடோடிவந்தவர்கள் விரட்டிவிட்டு, தீயில் ஒருவர் குளிர்காய்ந்த சம்பவத்தால், ஐவர் கருகி மாண்ட சம்பவம் இன்னும் கண்களுக்குள் நிழலாய் ஆடுகிறது.

பச்சை குழந்தையும் 12 வயதான சிறுவனும் இவ்வாறு கருகி போவார்கள் என யாருமே எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். கண்களை கண்ணீரால் குளம் கட்டசெய்திருக்கும் இந்தச் சம்பவம் இராகலை தோட்டம் மத்திய பிரிவு ஒக்டோபர் 07 ஆம் திகதி வியாழன் இரவு 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மண் சுவராலும்,பொலித்தின் ரெட்டுகளாலும்,மறைக்கப்பட்டு தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த வீடே தீ பிடித்து எரிந்துகொண்டிருந்த போது, அதனை அணைக்க ஓடோடி வந்தவர்களை விரட்டியடித்து விட்டு, வீட்டின் முற்றத்தில் போதையில் கிடந்த, மகன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அந்த வீட்டில் அறுவர் வசித்து வந்துள்ளனர். சம்பவம் தினத்தன்று 27 வயதுடைய தங்கையா இரவீந்திரன் என்பவர் மாத்திரம் உயிர் தப்பியிருந்தார்.

உயிர் தப்பியவரின் தந்தை இராமையா தங்கையா (வயது 61) முழுமையாக எரியுண்டு வீட்டின் முன் அறையில் கிடந்தார்.

அவரின் மனைவி செவனமுத்து லெட்சுமி (வயது 57), நதியா (வயது 34), நதியாவின் முதல் கணவருக்கு பிறந்த துவாரகன் (13), அவரது இரண்டாவது கணவரான மோகனதாஸ் என்பவருக்கு பிறந்த ஹெரோசன் (வயது 01) ஆகியோர் வீட்டின் பின் அறையில் ஒரே இடத்தில் கருகி கிடந்தனர்.

மலையக பெருந்தோட்ட பிரதேசங்களில் எத்தனையோ உயிரிழப்பு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கிறது ஆனால் இராகலை சம்பவமானது மக்களுக்கு பாரிய சோகத்தை ஏற்படுத்தியதுடன்,பாரிய சந்தேகத்தையும் கிளப்பியிருந்தது.

நதியாவின் கணவர் மோகனதாஸ், இராகலை நகரில்ஐசிங் கேக் மற்றும் நெக்டோ பானம் ஆகியவற்றை வாங்கி கொண்டு தனது மகனின் பிறந்தநாளை கொண்டாட அன்றைய தினம் காலை 10 மணியளவில் வருகை தந்துள்ளார்.

தேநீர் வேண்டாமென சொல்லிவிட்டு மகனை கொஞ்சிக் கொண்டு வீட்டு வாசலிலேயே இருந்துள்ளார் கணவன். சிறிது நேரத்தில் கேக் வெட்டப்பட்டது. அதிலிருந்து பூவை எடுத்து, பிள்ளைக்கு ஊட்டிவிட்டு முகங்களிலும் தடவியுள்ளார்.

அதன்பின்னர், தான் வாசிக்கும் இராகலை சூரியகாந்தி வீட்டுக்கு வரும்படி மனைவியை அழைத்துள்ளார். மறுநாள் காலையில் வருவதாக மனைவி தெரிவித்ததை அடுத்து, சுமார் ஒரு மணிநேரத்தில் அங்கியிருந்து கிளம்பிவிட்டார்.

மாலை பிறந்தநாள் கொண்டாட்டத்துக்காக, தம்பியான தங்கையா இரவிச்சந்திரனிடம் கேக் ஒன்றை வாங்கிவரும் நதியா கேட்டுள்ளார். உறவினர்களின் பங்குபற்றலும் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது.

பின்னர் அன்றைய தினம் மாலை பிறந்த நாள் வைபவத்தை கொண்டாட நதியா தயாராகியுள்ளார்.இதற்காக தனது தம்பியான தங்கையா இரவீந்திரன் கேக் ஒன்று வாங்கி வரும்படியும் கூறியுள்ளார் கேக்கும் வாங்கிவரப்பட்டுள்ளது.

சற்று மதுபோதையில் இருந்த தங்கையா இரவிச்சந்திரன், ஓட்டோவொன்றின் மூலம் இராகலைக்கு மீண்டும் சென்றுள்ளார். வரும்போது தள்ளாடியே வந்துள்ளார். வீட்டுக்குள் வந்து வெளியே சென்ற சிறிது நேரத்திலேயே வீடு தீப்பற்றி எரிந்துள்ளது.

சம்பவத்தை அறிந்த அயலவர்கள் கூச்சலிட்டு சம்பவ இடத்திற்கு வருகை தந்தவர்கள் பிள்ளைகள் எங்கே, லெச்சிமி அக்கா எங்கே? எனக் கேட்க, மதுபோதையில் தள்ளாடிகொண்டிருந்த இரவீந்திரன் (மகன்) வீட்டில் யாரும் இல்லை எல்லாம் சூரியகாந்திக்கு போய் விட்டார்கள் என சொல்லிக்கொண்டு அவ்விடத்திலேயே மல்லாக்க விழுந்துள்ளார்.

அயலவர்கள் தீயை கட்டுப்படுத்த முயசித்தும் பயனளிக்கவில்லை வீடு நொடியில் முழுமையாக எரிந்துவிட்டது. வீட்டின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீட்டர் பெட்டியும் வெடித்துச் சிதறியுள்ளது.

வீட்டில் எரிவாயு சிலிண்டர் வயர்களும் எரிந்துவிட்டன. எனினும், சிலிண்டர் வெடிக்கவில்லை. உள்ளிருந்தவர்களை மீட்க மண்சுவரை உடைத்துள்ளனர். எனினும், எந்த முயற்சியும் பயனளிக்கவில்லை.

அவ்வீட்டில் வளர்க்கப்பட்ட குட்டி எனும் பெயருடைய நாய், கண்ணீர் விட்ட நிலையில் சோகத்துடன் இருந்ததையும் அவதானிக்கமுடிந்தது.

சம்பவம் தொடர்பில் சட்ட விசாரணைகள் (08.10.2021) காலை ஆரம்பமானது.அங்கு நுவரெலியா பொலிஸ் நிலைய இரசாயன தடயவியல் பொலிஸார் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து அவர்களின் கடமையை ஆரம்பித்ததுடன்,கொழும்பிலிருந்தும் இரசாயன பகுப்பாய்வு பிரிவினர்கள் வரவழைக்கப்பட்டனர்.

இதன்போது, உடலங்களை பொதுமக்கள் பார்வையிடக்கூடாது பாதுகாப்பாக ஒரே சவக்குழியில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்பட்டதுடன்,தேவைப்படின் மீண்டும் சடலங்கள் தோண்டியெடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படும் என திறந்த உத்தரவை எழுத்து மூலம் சட்ட வைத்தியர் வழங்கியிருந்தார்.

இராகலை தோட்ட அதிகாரி, ஐந்து சவப்பெட்டிகள் பெறுவதற்கு பணம் வழங்கியிருந்தார். தோட்ட மக்கள் அஞ்சலி செலுத்த தோட்ட மையானத்தில் மாலை 7.30 மணியளவில் உடலங்கள் அடக்கம் செய்யப்பட்டன.

இரவீந்திரன் இராகல பொலிஸார் மயானத்திலிருந்து அழைத்து சென்றனர். நதியாவின் கணவர் விடுவிக்கப்பட்டார்.

இதையடுத்து பொலிஸாரின் பாதுகாப்பில் தடுத்துவைக்கப்பட்ட இரவீந்திரன் (12.10.2021) பிற்பகல் வரை மூன்று நாள்கள் விசாரிக்கப்பட்டார்.

தங்கையாவின் மகனான கெம்பா என்றழைக்கப்படும் இரவீந்திரன் சம்பவ தினத்துக்கு முதல் நாள் இராகலை எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் பெற்றோல் வாங்கியதாக தகவல் கிடைத்துள்ளது.

இராகலை நகரில் பல கடைகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கமெராக்களில் பதிவான காட்சிகளும் ஆராயப்பட்டன. தீ பற்றியெறிந்த போது, வீட்டுக்குள் யாரும் இல்லையென இரவீந்திரன் மக்களிடம் கூறியமையும் வீடியோவில் ஆதாரமாக உள்ளது.

அதன்பின்னர், இரவீந்திரனை 12ஆம் திகதி கைது செய்த பொலிஸார்.

வலப்பனை நீதிமன்ற நீதவான் டி.ஆர். எஸ்.குணதாச முன்னிலையில் அன்று மாலையே ஆஜர்செய்தனர். நீதவானின் உத்தரவின் பிரகாரம், அவர், இம்மாதம் 25ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

எவ்வாறியினும் இந்த உயிரிழப்புகள் ஏற்றுக்கொள்ள முடியாத துக்கத்தை தந்துள்ளது. இந்த சம்பவத்தில் வீட்டார் வளர்த்த நாய் சுடிநாய் என தெரிவந்தது. அந்நாள், மூன்று நாள்களுக்கு மேலாக சோகமாகவே இருந்துள்ளது.

இந்த நிலையில் இராகலை பரிச்சகாடு மண்ணில் பக்குவமாய் அடக்கம் செய்யப்பட்ட ஐந்து உயிர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமென இராகலை மத்திய பிரிவு தோட்ட மக்கள் மற்றுமின்றி அனைவருமே பிரார்த்தனை செய்துவருகின்றனர். உண்மை வெளிவர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# சாண் ஏற முழம் சறுக்கல்

## மாலையர்கட்டு கிராம மக்களின் வீட்டுத்திட்டத்தின் அவல நிலை


வ. சக்திவேல்
shagthivel@gmail.com



மட்டக்களப்பு மாவட்டத்தின், படுவாங்கரைப் பெரு நிலப்பரப்பின் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் எல்லைப்புறத்தில் அமைந்துள்ளதே மாலையர்கட்டு கிராமமாகும். வயலும் வயல் சார்ந்த மருத நிலத்தில் வாழும் அக்கிராமத்திலுள்ள அநேகம்பேர், இருப்பதற்கு வீடின்றி அல்லலுறுகிறார்கள்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில், புதிய வீடமைப்புதிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது இன்றுவரை பூரணப்படுத்தப்படாத நிலையில் உள்ளதால், அம்மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்று உறையுள். வயலில் கூலி வேலை செய்து, அதில் பிழைத்துவரும் மக்கள், தமது உழைப்பில் ஒரு வீட்டைக் கட்டி முடிப்பதற்கு வசதியில்லாத நிலையில், அரசாங்கம் வீட்டுத் திட்டத்தை அமைத்துக் கொடுத்துள்ள போதிலும், அது இற்றைவரை பூரணப்படுத்தப்படாத நிலையில், 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை' என்பதுபோல் வாழ்ந்து வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.





போரதீவுப் பற்றுப் பிரதேசத்தில், கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் சஜித் பிரேமதாஸ, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சராக இருந்தபோது, 'செமட்ட செவன' வீட்டுத்திட்டத்தின்கீழ் 29 திட்டங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதில் இதுவரையில், ஏழு செயற்றிட்டங்கள் மாத்திரமே பூரணப்படுத்தப்பட்டு உள்ளன. மிகுதியான வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் அரைகுறையாக உள்ளன.

"எமக்காக ஆரம்பிக்கப்பட்ட எமது வீட்டுத்திட்டம், தற்போது வனாந்தரமாக காணப்படுகின்றது. சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாக வந்திருந்தால், எம்முடைய வீட்டுத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டு, நாங்கள் அதில் வசித்து வந்திருப்போம். எமது கிராம மக்கள், இருப்பதற்கு வீடுகளின்றிப்படும் இன்னல்களை நேரில் வந்து பார்த்தால்தான் தெரியும். இதனை விரைவில் முடித்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்" என்றார் த. தங்கவடிவேல்.

"எமக்கு இருப்பதற்கு வீடு இல்லை; நாங்கள் தற்போது மாமியின் வளவில்தான் சிறிய குடில் வைத்து, அதில் வசித்து வருகின்றோம். 'செமட்ட செவன' வீட்டுத்திட்டத்தின்கீழ், எமக்கும் ஒரு வீடு கிடைத்தது. ஆனால், மூன்று வருடங்கள் ஆகியும் அந்த வீட்டுத்திட்டம் இற்றைவரை பூரணப்படுத்தப்படவில்லை. முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபாய் தந்தார்கள். அத்தோடு சேர்த்து எங்களிடமிருந்த சிறிய தங்க நகைகளை அடமானம் வைத்தும், கடன்பட்டும் 'லின்டர்' மட்டம் வரைக்கும் கட்டி முடித்துள்ளோம். எம்மைப்போன்றுதான் ஏனையவர்களும்; தற்போது எமது வீட்டுத்திட்டம் காடு வளர்ந்துபோய் பார்ப்பாருமில்லை, கேட்பாருமில்லை போன்று கிடக்கின்றது. நாம் படும் பாடுகளை யாரிடம் சொல்வது எனத் தெரியாதுள்ளது. லின்றர் மட்டம் கட்டி முடிக்கப்படும் பட்சத்தில், அடுத்தகட்ட காசு வரும் என சொன்னார்கள் இதுவரையில் யாரும் வரவும் இல்லை; பார்க்கவும் இல்லை; காசு தரவும் இல்லை.

எமது கிராமத்து மக்கள் தினமும் கூலி வேலை செய்து உழைத்து உண்டு வாழ்ந்து வரும் மக்கள். இந்நிலையில் இந்த வீடுத்திட்டத்தைக் கொடுத்து அனைவரும் கடனில்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். வீடும் கட்டி முடிக்கப்படவில்லை; கடன் தொல்லையும் விட்டபாடில்லை. இந்த வீட்டுத்திட்டத்தை எமது சொந்த வளவிலாவது கட்டப்பட்டிருக்குமாக இருந்தால், அது எமக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்திருக்கும். மாறாக, ஊரின் ஒதுக்குப்புறமாக அமைந்துள்ளதால், ஒருவர் மாத்திரம், அங்குபோய் அரை குறையாகவேனும் முடித்துக் கொண்டு, தனியாக ஒரு குடும்பம் மாத்திரம் வாழ முடியாது.

எனவே, கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர்தான் எமக்கு இந்த வீடு வழங்கப்பட்டது. எமக்கு வீடுகளை வழங்கிய முன்னாள் அமைச்சர் சஜித், கடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்து விட்டதால்த்தான், அவரால் கொண்டு வரப்பட்ட இந்த வீடுகள் பூரணப்படுத்தப்படாமல் உள்ளதாக பலரும் கதைக்கின்றார்கள். இவ்வாறு சென்றால், எமது நிலைமை என்னாவது? தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், தோல்வியடைந்தாலும் எமக்குப் பிரச்சினையில்லை; எமது வீட்டுத்திட்டத்தை அரசாங்கம் முடித்து பூரணப்படுத்தித் தரவேண்டும்" என்கின்றார் ஜீவராசா ஜெனித்தா.

"எமது கிராமத்தில் கடந்த அரசாங்கம் எமது கிராமத்தைச் சேர்ந்த 40 குடும்பங்களுக்கு 40 வீடுகளைத் தந்தார்கள். தற்போது இரண்டு லெட்சத்திற்குமேல் செலவாகியுள்ளது. ஆனால் அரசாங்கம் ஒருலெட்சம் ரூபா காசை மாத்திரம்தான் தந்துள்ளது. எனினும் அராங்கம் மாறியுள்ளதாக தெரிவித்து வீட்டுத்திட்டத் அரைகுறையாக கிடக்கின்றது. எமக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் பரவாயில்லை. எம்முடைய வீட்டுத்திட்டத்தை முற்றுமுழுதாக பூரணப்படுத்தி தரவேண்டும்" என்கிறார் வித்தகன்.

இவ்வாறு, ஒவ்வொரு வீடும் தலா 750,000 ரூபாய் ஒதுக்கீட்டில் நிர்மாணிப்பதற்கு திட்டவரைபு உள்ள நிலையில், அதில் ஒரு இலட்சம் மாத்திரம் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மாலையர்கட்டு கிராம மக்கள் தமது உட்கிடக்கைகளை எடுத்துரைக்கின்றனர்.

இவ்வாறு 'செமட்டசெவன' வீட்டுத்திட்டம் அரைகுறையாக இவ்வாறு இருக்க, தற்போதைய அரசாங்கத்தால் 'உங்களுக்கு வீடு; நாட்டுக்கு எதிர்காலம்' எனும் தொனிப்பொருளின் கீழ், மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற்பாடுகள், 2020 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகின்றன.

மாறி மாறி ஆட்சி செய்கின்ற அரசாங்கங்கள், தங்களுக்கு ஏற்றாற்போல் திட்டங்களை வகுத்து, மக்களை வைத்து அவரவர் முன்னேறிக் கொண்டு செல்கின்றார்களே தவிர, மக்களின் வாழ்க்கையில் 'சாண் ஏற முழம் சறுக்குவது' போன்ற நிலைமையே காணப்படுகின்றது.

எனினும் எந்த அரசாங்கம் என்றாயினும் மக்களுக்காக முன்வைக்கப்பட்ட திட்டங்கள் அரைகுறைகாக விட்டு விட்டுப் போகின்ற சந்தர்ப்பத்தில் அதனை பூரணப்படுத்திக் கொடுத்துவிட்டு புதிய செயற்றிட்டங்களை உருவாக்குகின்ற போதுதான் அவை நிலைபேறான தன்மைக்கு வித்திடும் எனலாம்.



# குழிகளாகும் கிணறுகள்

## விவசாயம், குடிநீர் ஆகியவற்றின் புதைகுழிகள் குழாய்க்கிணறுகள்

அ. அகரன்





'நீரின்றி அமையாது உலகு' என்பதற்கிணங்க, நீரின் தேவை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கின்ற போதிலும் உலகத்தில் உள்ள குடிநீரின் அளவு குறைவடைந்து செல்கின்றமையும் மாசடையும் தன்மையும் உயர்ச்சி வேகத்தையே காட்டுகின்றது.

உலக வெப்பமயமாதல் காரணமாக பூமியின் மேற்பரப்பில் உள்ள நீரானது ஆவியாவதன் காரணமாகவும் நீர்த்தேவைக்காக முதலாம் படை நீரில் இருந்து குழாய்க் கிணறுகள் அமைத்து இரண்டாம் படை நீரை பயன்பாட்டுக்கு பெறுவதாலும் சீரான நீர் பரிமாணம் மாற்றப்பட்டு குடிநீர் பற்றாக்குறைக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையை பொறுத்தவரையில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் மழை நீரை சேகரிக்கும் குளங்கள் மேற்பரப்பு நீரை தாங்கியிருந்த போதிலும் கூட, தற்போது குறித்த பல குளங்கள் பராமரிக்கப்படாமை குளங்கள் மக்கள் குடியிருப்புக்காக ஆக்கிரமிக்கப்படுதல் போன்றவற்றால் அதிகளவான மழை நீர் சேகரிக்கப்படாமலேயே கடலை சென்றடையும் துர்ப்பாக்கியம் காணப்படுகின்றது. இந்த வகையில், வவுனியா பிரதேசத்தில் நீர் தேவையை குளங்களும் ஆறுகளும் பூர்த்தி செய்யும் முக்கிய வளங்காக காணப்பட்டது. ஒரு பாரிய குளமும் 22 நடுத்தர குளங்களும் காணப்படும் வவுனியாவில் 674 சிறிய நிர்ப்பாசன குளங்களும் காணப்படுகின்றன. இன்று பல நகர்ப்பகுதி குளங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு மக்கள் வாழ்விடங்களாக மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறாக 83 குளங்கள் கைவிடப்பட்டு அல்லது தூர்வாரப்படாமல் பராமரிக்கப்படாமல் காணப்படுவதுடன், ஆறுகள் பலவும் தூர் வாரி, சீராக பராமரிக்கப்படாமையால் நீர் வழிந்தோடும் முறையில் மாற்றம் ஏற்பட்டு, வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கச் செய்வதையும் மறுத்துவிட முடியாது. எனவே, நீர் முகாமைத்துவம் சீராக இன்மையினால் வவுனியா மாவட்டத்தில் ஏற்பட்டுவரும் நீர் பற்றாக்குறைக்கு மத்தியில் தற்போது அதிகளவான குழாய் கிணறுகள் அமைக்கும் பணிகள் அதிகரித்துச் செல்கின்றன.

இந்தக் குழாய் கிணறுகள், விவசாயத்துக்கு எதிரியாக காணப்படுவதுடன் பூமியின் மேற்பரப்பு நீரை இல்லாது ஒழிக்கும் கிணறுகளாகவும் காணப்படுகின்றன. சுமார் 100 தொடக்கம் 150 அடி ஆழம் வரை நிலத்தினை துளை போட்டு, நீரைப் பெறுவதால், சாதாரண கிணறுகளில் உள்ள நீர் வற்றிப்போகும் நிலை உள்ளதுடன் குளங்களில் சேமிக்கப்படும் நீரும் மிக விரைவில் பூமியின் இரண்டாம் படைக்கு செல்லும் வாய்ப்புள்ளது.

எனவே, விவசாயத்துக்கான நீரோ சாதாரண குடிநீருக்கான தேவையோ பூர்த்தி செய்ய முடியாத துர்ப்பாக்கியம், குழாய்கிணறுகளால் ஏற்படுத்தப்பட்டு வருவதனை யாரும் கண்டு கொள்ளாமல் உள்ளனர்.

வவுனியாவைப் பொறுத்தவரையில், கிராமங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 10க்கும் மேற்பட்ட குழாய் கிணறுகள் காணப்படும் நிலையில், அரசாங்கத்தின் திட்டங்களும் கூட நீர் முகாமைத்துவத்தினை சிதைக்கும் வகையில் குழாய்கிணறுகளை அடிப்படையாக கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் புலம்பெயர் அமைப்புகளும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதாகத் தெரிவித்து, குழாய்கிணறுகளை ஒரு திட்டமிடல் இல்லாமல் அமைத்து வருகின்றன.

குழாய்க்கிணறு அமைப்போர் சங்கம் என்ற ஓர் அமைப்பு, நீரியாக குழாய் கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோர்; செயற்படும் அளவிற்கு வவுனியா மாவட்டத்தில் குழாய் கிணறு அமைக்கும் பணிகள் தீவிரம் பெற்று வருகின்றது.

எனினும் இது தொடர்பில் எவரும் கவனம் செலுத்தும் நிலை ஏற்படாத தற்போதைய சூழலில், மிக விரைவில் வவுனியா மாவட்டத்தில் கிணறுகள் வெறும் குழிகளாக மட்டுமே காணப்படும் நிலை உருவாகி, அனைவரும் நீருக்காக அலையும் சந்தர்ப்பம் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது போய்விடும்.

குறிப்பாக, வவுனியா மாவட்டத்தின் இவ்வாறான குழாய் கிணறுகளை தடுக்க வேண்டியது அரச திணைக்களங்களாக இருந்த போதிலும் கூட, குறித்த அரச திணைக்களங்களே கிராமம் கிராமமாக குழாய் கிணறுகளை அமைப்பதும் அதில் இருந்து குறித்த கிராமத்திற்கான குடிநீர் தேவையை நிவர்த்தி செய்வதாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

குறித்த கிராமங்களின் குடிநீரை ஓர் இடத்தில் குவியச்செய்வது மாத்திரமின்றி வீடுகளில் உள்ள விவசாய கிணறுகள் மற்றும் குடிநீர் கிணறுகளில் உள்ள நீரை பராமரிப்பதற்கான செயற்றிட்டத்தினை அரச திணைக்களங்கள் முன்னெடுக்காமை வேதனையே.

இவ்வாறான முறையற்ற செயற்பாட்டால் வவுனியா வடக்கில் ஒலுமடு என்ற கிராமத்தில் கிணறுகளில் நீரைப் பெற முடியாத ஆபத்தான நிலைக்கு மக்கள் சென்றுள்ளதுடன் தோணிக்கல் பகுதியிலும் கோடை காலத்தில் குடிநீருக்கான தட்டுப்பாட்டு அதிகரித்து செல்கின்றது.

குழாய் கிணறு அமைப்பதற்கு அரச திணைக்களங்கள் எதிர்ப்பு வெளிப்படுத்தாவிட்டாலும் சில கிராமங்களில் மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்த பின்நின்றதில்லை. அண்மையில் வவுனியா, யேசுபுரம் கிராமத்தில் அமைக்கப்படவிருந்த குழாய்கிணற்றை அப்பகுதி மக்கள் தடுத்து நிறுத்தியிருந்ததை மறுத்துவிட முடியாது.

எனவே, நீர் முகாமைத்துவத்துக்குப் பெரும் கேடாகவும் விவசாயம் மற்றும் குடிநீருக்கான புதைகுழியாகவும் காணப்படும் குழாய் கிணறுகளை அமைப்பதற்கு அரசாங்கம் தடைவித்திக்காத வரை, இலங்கையில் பயன்படுத்தக்கூடிய நீரின் அளவில் வீழ்ச்சி ஏற்படுவதனை தடுக்க முடியாது.



LK Newspapers Viber Community

ஐந்தாவது ஆண்டு நிறைவில் நாடகப்பள்ளி

# கல்வியுடன் கலைப்பணி



அருட்சயா மரியராஜா
(முதலாம் வருட மாணவி, நாடகமும் அரங்கக் கலைகளும், சுவாமி விபுலானந்த அழகியல் கற்கை நிறுவகம், கிழக்கு பல்கலைக்கழகம்)

இலங்கை நாடகப்பள்ளி தனது ஐந்தாவது ஆண்டு நிறைவை திங்கட்கிழமை (18) காண்கிறது. அதையொட்டிய சிறப்பு நிகழ்வாக, நாட்டின் தற்போதைய கொவிட்-19 பெருந்தொற்று சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, கலை நிகழ்ச்சிகள் நடைபெறாத போதிலும், மட்டுப்படுத்தப்பட்ட பார்வையாளர்களுடன் 23ஆம் திகதி சனிக்கிழமை, 'அரங்க ஆளுமைகள் நால்வர்' நூல் வெளியீடு, திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில், மாலை நான்கு மணிக்கு நடைபெறவுள்ளது. அன்று அரங்கியல் நூல்களின் கண்காட்சியும் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## நாடகப்பள்ளி – இலங்கை

காத்திரமான தமிழ் நாடகங்களை மேடையேற்றுவதற்காகவும் அரங்கியல் செயற்பாடுகள் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் மட்டும் மட்டுப்படுத்தப்படாமல் அனைத்து அரங்கியலாளர்களுக்கும் சென்றடைய வேண்டும், அரங்கியல் ஆவணங்கள் பேணப்பட வேண்டும் போன்ற உயர்ந்த நோக்கங்களின் அடிப்படையில், 'கல்வியுடன் கலைப்பணி' எனும் மகுட வாக்கியத்துடன் 'நாடகப்பள்ளி' (School of theatre) கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் பாக்கியநாதன் நிரோஷனால் 2016.10.18 அன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை நாடகப்பள்ளியால், 1- அரங்கியல் வலைதளம், 2- அரங்கியல் நூலகம், 3- அரங்கியல் ஆவணப்படுத்தல் (நூலாக்கம்), 4- கூத்துருவ நாடகங்களை அதிகம் தயாரித்தல், 5- அரங்கியல் பயிற்சிப் பட்டறைகள், 6- 'விருட்ஷமாகும் விழுதுகள்' ஆவணத் தொடர், 7- சர்வதேச இணையவழி அரங்கியல் கருத்தரங்கு போன்ற காத்திரமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




## அரங்கியல் வலைதளம்

நாடகப்பள்ளி ஆரம்பிக்கப்பட்ட போது உலகில் உள்ள அனைத்து தமிழ் நாடகவியலாளர்கள், பாடசாலை - பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் என அனைவருக்கும் பயன்படக்கூடிய வகையில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில், 'அரங்கியல் வலைத்தளம்' முதன்மையானது.

முகநூலில் 'நாடகப்பள்ளி' பக்கம் உருவாக்கப்பட்டு, நாடகம் சார்ந்த கட்டுரைகள், புகைப்படங்கள், காணொளிகள் என நாடகமும் அரங்கியலும் கற்கும் அனைவருக்கும் பயன்படக்கூடிய தகவல்கள் தொடர்ச்சியாகப் பதிவிடப்படுகிறது. அத்துடன், ஈழத்தில் நாடகம் சார்ந்த செயற்பாடுகள் எங்கே நடைபெற்றாலும் அவற்றை அனைவருக்கும் அறியச்செய்யவும் இத்தளம் பயன்படுகிறது.

உலகளாவிய ரீதியில், நாடகம் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் பலர், இத்தளத்தில் இணைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. அவ்வாறான பலரின் அரங்கியல் சார் கட்டுரைகள், இத்தளத்தில் தொடர்ந்து பதிவிடப்படுகின்றன.

## அரங்கியல் நூலகம்

நாடகப்பள்ளி இயக்குநர் பா. நிரோஷன், மட்டக்களப்பு தேசிய கல்வியற் கல்லூரியில் கற்ற காலத்தில், ஆய்வுத் தேவைக்காக நாடக நூல் ஒன்றைத் தேடிய போது, அந்நூல் எங்கும் கிடைக்கவில்லை. அதனால் ஆய்வின் தலைப்பை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டதாக, அரங்கியல் நூலகம் பற்றி அவருடன் உரையாடுகையில் அறிந்துகொள்ள முடிந்தது.

பின்னர், ஆசிரியர் தொழில் கிடைத்து கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் பணியாற்றிய போது, எதேச்சையாக பழைய புத்தகங்கள் விற்பனை செய்யும் கடைக்கு சென்ற போது, அவர் ஆய்வுக்காகத் தேடிய அந்த நாடக நூல் கவனிப்பாரின்றி தரையில் குவிக்கப் பட்டு இருந்ததைக்கண்டு, இப்படி எத்தனையோ நாடகம் சார்ந்த நூல்கள் கேட்பாரின்றி பயன்படாமல் எங்கங்கெல்லாம் சிதறி இருக்கும் என்றெண்ணி அவ்வாறான நூல்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்ற சிந்தனையில் உதித்ததே அரங்கியல் நூலகம் ஆகும்.

இதுவரை ஈழத்திலும், புலம்பெயர் தேசத்தில் இருந்தும் வெளிவந்த நாடகம் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள் என பாடசாலை மாணவர் முதல் பல்கலைக்கழக விரிவுரையாளர் வரை பலரினதும் உதவியுடன் நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

## அரங்கியல் ஆவணப்படுத்தல்


இதுவரை முழுமையாகப் பேசப்படாத விடயங்களைத் தேடி, அவற்றை ஆவணப்படுத்தல் இதன் பிரதான செயற்பாடு ஆகும். அந்த வகையில், ஈழத்தில் பலநூறு நாடக குழுக்கள் இயங்கி, நாடகப் பணிகள் ஆற்றியபோதிலும் மிகச் சில நாடக குழுக்களே இன்று போற்றப்படுகின்றன. ஆதலால், எதிர்கால தேவைகருதி இயங்கியல் நிலையில் உள்ள நாடக குழுக்களை ஆவணப்படுத்தி, 'ஈழத்து தமிழ் நாடக நிறுவனங்கள்' எனும் நூலும், அதேபோல் நாடகப்பணியாற்றிய தமிழ் நாடக ஆளுமைகளை ஆவணப்படுத்தி, 'ஈழத்து தமிழ் நாடக ஆளுமைகள்' எனும் நூலும், நாடகப்பள்ளி நடத்திய சர்வதேச அரங்கியல் கருத்தரங்க உரையாடலை தொகுத்து, 'அரங்க ஆளுமைகள் நால்வர்' எனும் நூலும், இளம் கலைஞர்களின் அரங்கச் செயற்பாடுகளை தொகுத்து, 'ஈழத்து அரங்கில் இளம் ஆளுமைகள்' என நான்கு நூலாக்கம் இதுவரை செய்யப்பட்டுள்ளது.

## கூத்துருவ நாடகங்களை அதிகம் தயாரித்தல்

ஈழத் தமிழர் அரங்கில், பல்வேறு முறைகளில் பாரம்பரியம் பேணப்படுகிறது. அதிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகரும் வண்ணம், பார்வையாளர்களின் சூழலுக்கு ஏற்ப, அனைவரும் இரசிக்கத்தக்கதாக, ஈழத்தில் தமிழர் பிரதேசமெங்கும் உள்ள ஆடல் பாடல் மரபுகளை ஒன்றினைத்து, சமகால கதைக்கருக்களை எடுத்து, கூத்துருவ நாடகமாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பாக, 2018ஆம் ஆண்டு கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர்களால் நிகழ்த்தப் பெற்ற, 'இராமநாத வித்தகம்' கலைவிழாவில் 'வீர நங்கையர் புரம்' கூத்துருவ நாடகம் தயாரிக்கப்பட்டு, மேடையேற்றப்பட்டது. இதில் 60 கலைஞர்கள் (அதிபர்கள், ஆசிரியர்கள்) பங்கு பற்ற வெள்ளவத்தை இராமகிருஷ்ண அரங்கில், அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மேடையேற்றப்பட்டது.

தயாரிக்கப்பட்ட அனைத்துக் கூத்துருவ நாடகங்களின் கதைக் கருக்களும் சமகால ஈழத்தமிழரின் வாழ்வியலையும் இடர்பாடுகளையும் கதைக்கருவாகக் கொண்டமைந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, 'வீர நங்கையர் புரம்' கூத்துருவ நாடகம், ஈழத்து போராட்ட வாழ்வியல் வடிவில் பெண்களில் பங்களிப்பை பேசியது.





பாக்கியநாதன் நிரோஷன்

அதுபோல், 'கரிகாலன்' பேசப்படாத தியாகத்தையும் வாழ்வியல் சிதைவையும் காட்டிக்கொடுப்பையும் பேசியது. இவ்வாறே ஏனைய படைப்புகளின் கதைக்கருக்களும் அமைந்திருந்தன.

## அரங்கியல் பயிற்சிப் பட்டறை

வருடாவருடம் பாடசாலை மாணவர்களின் திறன், ஆளுமைகளை வளர்க்கும் நோக்கிலும் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கிலும் அரங்கியல் பயிற்சிப் பட்டறைகள் நிகழ்த்தப்படுகின்றன. கொழும்பு றோயல் கல்லூரி நடத்தும் நாடகப் பட்டறைகளில் பங்குதாரர்களாகவும் வளவாளராகவும் நாடகப்பள்ளியினர் தொடர்ந்து பங்காற்றுகின்றனர்.

2019ஆம் ஆண்டு கொழும்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடத்தப்பட்ட அரங்கியல் பயிற்சிப் பட்டறையில், இங்கிலாந்து அவைக்காற்று கலைக் கழகத்தின் க.பாலேந்திரா, ஆனந்தராணி பாலேந்திரா போன்றோரும் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.


## 'விருட்ஷங்களாகும் விழுதுகள்' ஆவணத் தொடர்

அர்ப்பணிப்புடன் தொடர்ந்து அரங்கத்துறையில் பணியாற்றிவரும் இளம் கலைஞர்களில் அரங்கியல் செயற்பாடுகள், வாரத்தில் ஒருநாள் 'விருட்ஷங்களாகும் விழுதுகள்' ஆவணத் தொடராக பா. நிரோஷனால் எழுதப்பட்டு, நாடகப்பள்ளி இணையத்தில் வெளியாகிறது. இத்திட்டத்தில் அரங்கியல் துறைகளில் ஈடுபடுகின்ற அனைத்து கலைஞர்களின் செயற்பாடுகளும் ஆவணப்படுத்தப்பட்டு முழுமையாக நூலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

## சர்வதேச இணையவழி அரங்கியல் கருத்தரங்கு

கடந்த காலங்களில் அர்ப்பணிப்பு டன் அரங்கப் பணியாற்றிய பல தமிழ் நாடக ஆளுமைகளை நாங்கள் மறந்து விட்டோம்; அறியாமல் போனோம். அவர்கள் சார்ந்த விடயங்களை, உலகறியச் செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கு உண்டு என்ற நோக்கத்துடன் இச்செயற்பாட்டு ஆரம்பிக்கப்பட்டது.

# பழைய குருடி கதவை திறவடி



ரவிச்சந்திரன் பிரஷாஹினி
(நான்காம் வருடம் நாடக கற்கைகள் துறை யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
prashaprashahini@gmail.com

அதிகரித்து வருகின்ற கொரோனா காலப்பகுதியில் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகள் குறித்த செய்திகளே பரவலாக பேசப்பட்டு வருகின்றன. இன்றைய காலத்தில் இலங்கையானது பெரும் பொருளாதார சிக்கலை எதிர்நோக்கி வருகின்றது. இதனால் நாட்டில் தொழிலாளி முதல் முதலாளிகள் வரை அனைவரது வாழ்க்கையிலும் பொருளாதார சிக்கல் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

திடீரென ஏறிய விலைவாசிகள் ஒட்டுமொத்த நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவுகளை புரட்டிப் போட்டுவிட்டது. இப் பெருந்தொற்றுக்காலத்தில் சிறு சிறு கூலி தொழில்களை செய்து அன்றாடம் தன் வாழ்க்கைச் செலவுகளை சமாளித்து வருகின்ற சாதாரண மக்களின் காதுகளில் பேரிடியாய் விழுந்தது அச்செய்தி.

ஒரே இரவில் எரிவாயு, சீனி, பால்மா, சிற்றுண்டி உணவுகள் என பொருட்களின் விலை ஏற்றத்தால் மக்கள் பாரிய சிக்கல்களை எதிர்நோக்க தயாராகினர். குறிப்பாக எரிவாயு விலையேற்றத்தால் இன்றைக்கு மாயமாக இருந்த மண்ணெண்ணெய் அடுப்புகள் மலைபோல விற்பனைக்கு குவிந்து கிடக்கின்றன.

இதன்படியே லீட்ரோ கேஸ் விலை 12.5 கிலோகிராம் ரூபாய் 2,675 இற்கும், 5 கிலோகிராம் ரூபாய் 1,071 இற்கும், 2.3 கிலோகிராம் 506 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக எரிவாயு வெளியேற்றத்தின் பின்னர் அதிகமானோர் விறகு அடுப்பு பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர். மறு பாதிப் பேர் மண்ணெண்ணெய் அடுப்புகளை பயன்படுத்த தொடங்கிவிட்டனர்.

மலையகப் பகுதிகளில் மக்கள் விறகடுப்பினையே அதிகமாக பயன்படுத்துகின்றனர். குறிப்பாக மலையகப் பிரதேசங்களில் பொறுத்தமட்டில் எரிவாயு அடுப்பு புழக்கத்தில் இருந்தாலும் கூட அனேகமானோர் விறகடுப்பினையே பயன்படுத்தி வருகின்றனர். காரணம் கிராமப்புறங்களை சுற்றிலும் காடுகள், மலைகள் என இயற்கை சூழலில் அம்சங்கள் நிறைந்து இருப்பதனால் விறகு தட்டுப்பாடு அங்கு இருப்பதில்லை.

அத்தோடு மக்கள் தங்களுக்குத் தேவையான விறகுகளை காடுகளிலும், மலைப்பகுதிகளிலும் பெற்றுக் கொள்வதனால் விறகிற்கான தேவை இருந்துகொண்டே இருக்கின்றன. அதுமட்டுமன்றி காடுகளில் மரங்களில் இருந்து விழுகின்ற சிறு குச்சிகளும் தளபாடங்களுக்காக வெட்டப்படுகின்ற மரத்தின் கழிவு விறகுகளும் விறகடுப்பிற்காக பயன்படுகின்றன.

மலையகப் பிரதேசங்களில் விறகு அடுப்பும், அதற்கு தேவையான விறகுகளும் இருப்பதனால் ஓரளவிற்கு இந்த எரிவாயு விலை ஏற்றத்தை மலையகத்தில் வாழ்கின்ற மக்களால் எதிர் கொள்ள முடிகின்றது எனலாம். இதனால் எரிவாயு அடுப்பின் பயன்பாட்டை குறைத்து அனேகமாகமானோர் தங்களுடைய தேவைக்காக விறகடுப்பினையே மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இது ஒருபுறமிருக்க நகரங்களில் வசிக்கின்ற மக்களுடைய நிலைமை பற்றியும் கவனம் செலுத்தப்பட வேண்டிய தேவை உண்டு. அதிகமாக நகர்ப்புறங்கள் எரிவாயு அடுப்பினையே பெரிதும் உபயோகப்படுத்துகின்ற மக்கள் வாழ்கின்ற ஒரு பகுதியாகும்.

கிராமப்புறங்களில் இலவசமாக கிடைக்கக்கூடிய விறகுகள் இங்கு அவ்வளவு எளிதாக கிடைப்பதில்லை. பணம் கொடுத்து விறகுகள் வாங்க வேண்டிய சூழலுக்குள் வாழ்ந்து கொண்டிருக்கும் நகர்ப்புற மக்களின் வாழ்வில் எரிவாயுவிலை ஏற்றம் நெருக்கடிகளை கொடுக்க ஆரம்பித்துள்ளது எனலாம்.

எனவே இக்கொரோனா காலப்பகுதியில் தொழில் முடக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விறகடுப்பு பயன்படுத்த வேண்டும் என்றாலும் அதிகமான விலை கொடுத்தே விறகுகளை வாங்க வேண்டியதாக உள்ளது. குறிப்பாக மக்கள் விறகடுப்பு பாவனைக்கு மாறத் தொடங்கிய உடனே விறகுகளின் விற்பனையிலும் விலைகள் ஏறத் தொடங்கின.

நகர்ப்புறங்களில் கருவாப்பட்டைக்காக வெட்டப்படுகின்ற மரங்களும், தளபாடங்கள் செய்ய வெட்டப்படுகின்ற மரங்களுமே விறகுகளாக விற்பனை செய்யப்படுகின்றன. எனவே கருவா மர விறகுகளின் விற்பனை அதிகரித்துள்ளதோடு விலையிலும் ஏற்றம் ஏற்பட்டுள்ளது.



இதனால் மண்ணெண்ணெய் அடுப்புகளுக்கான விற்பனை சடுதியாக அதிகரித்தது. இன்றைக்கு எரிவாயு அடுப்பின் வருகையோடு மண்ணெண்ணெய் அடுப்பினை மறந்து போயிருந்தனர். இலகுவாக சமைக்கவும், நேரத்தை மிச்சப்படுத்துவதாகவும் எண்ணி எவ்வளவு விலை கொடுத்தும் எரிவாயு அடுப்பினை வாங்க தயாராகிவிட்டனர்.

ஆனால் இந்நிலையில் விறகடுப்பினதும், மண்ணெண்ணெய் அடுப்பினதும் பயன்களைப் பற்றி மக்கள் சிந்திக்கத் தொடங்கிய சூழ்நிலையை காலம் உருவாக்கி விட்டது எனலாம். எரிவாயு விலை ஏற்றத்தினால் மண்ணெண்ணெய் அடுப்பினை வாங்குவதற்கு வரிசையில் நின்று கொண்டிருக்கின்றனர் இன்று!

ஆனாலும் கூட விறகு அடுப்பு பயன்பாட்டினால் விறகிற்காக காடுகளை அழிக்கக் கூடிய சந்தர்ப்பம் ஒருபுறம் இருந்தாலும் கூட அதிகமாக காய்ந்த மரப்பட்டையும், ஒடிந்த குச்சிகளையுமே தன் பாவனைக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனாலும் மரக்கழிவுகள் விறகுகளாக விற்பனையாகினாலும் கூட, காலப்போக்கில் இந்நிலைமை நீடிக்கும் பட்சத்தில் காடுகளை அழித்து விறகுகளாக்க வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு விடுவோமோ என்ற அச்சம் ஒரு புறம் இருக்க தான் செய்கின்றது.

எரிவாயு விலை அதிகரிப்பு ஒருபுறமிருக்க சில இடங்களில் அதிக விலைக்கும் எரிவாயு விற்பனை செய்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பொதுவாகவே மலையக பிரதேசங்களை பொறுத்தவரையில் விலையானது குறிப்பிட்ட நிலையிலிருந்து அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்கின்ற ஒரு வழக்கம் இன்று காணப்படுகின்றது.

அந்தவகையில் எரிவாயு




விலையானது ஆரம்பத்தில் கூட்டப்பட்டு இருந்தாலும்கூட அதற்குப் பின்னர் 75 ரூபாய் குறைக்கப்பட்டு இருந்த போதிலும் 2,800 ரூபாய் விலையிலேயே விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதற்கடுத்த கட்டமாக, பால்மா விலையேற்றம் பாரிய தாக்கத்தினை மக்களிடையே ஏற்படுத்தி விட்டது. பால்மா விலையேற்றத்தால் சிறு வயது குழந்தை முதல் பெரியவர்கள் வரையிலும் பாரிய சிக்கல்களை இன்று எதிர்கொள்கின்றனர். ஆரம்பத்தில் பதுக்கப்பட்ட பால்மா பெட்டிகள் அனைத்தும் விலையேற்றத்தின் பின்னர், புதிய விலைப்பட்டியலோடு முன் அடுக்குகளில் பிரகாசிக்கின்றன. அவை எவ்வாறு திடீரென உதயமாகின?

ஆரம்பத்தில் பால்மாவானது தட்டுப்பாடு ஏற்பட்ட போது அனேகமான கடைகளில் 7 யோகட் வாங்கினால் மாத்திரமே பால்மாவானது விற்பனை செய்யப்பட்டது.

ஆனால் பால்மா விலை ஏற்றத்தின் பின்னரும் இதே நிலை தொடர்ந்து இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். காரணம் இன்றைக்கும் பால்மா விலை ஏற்றத்துக்குப் பின்னரும்கூட கடைகளில் குறிப்பிட்ட விலைக்கு பொருட்களை வாங்கினால் மாத்திரமே பால் மாவானது விற்பனை செய்யப்படுகிறது.

இதனைத் தவிர தற்போது சீமெந்து விலை அதிகரிப்பின் காரணமாக பல இடங்களில் சீமெந்து தட்டுப்பாடு நிலவி வருகிறது. குறிப்பாக சீமெந்தின் விலையானது மேலும் விலையேற்றப்படலாம் என்ற காரணத்தினால் பல கடைகளில் பதுக்கி வைக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக பல பொருட்கள் பழைய விலைக்கு வாங்கிய பொருட்களாக இருந்தாலும் கூட புதிய விலையின் அடிப்படையிலேயே அவை விற்பனை செய்யப்படுகிறது.

நாட்டில் கொரோனா பிடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்கள் விலைவாசி ஆட்டத்தில் சிக்கிக்கொண்டு அல்லல் படுகின்றனர். அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பு தேடும் மக்கள் வாழ்வில் படிப்படியான விலை ஏற்றம் பட்டினியே தேடித்தருகிறது. அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றமானது பெரும்பாலான மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தினை செலுத்தி வருகின்றதோடு திடீரென ஏற்பட்ட விலைவாசி ஏற்றம் காரணமாக மக்கள் பதற்ற நிலையை எதிர்கொண்டு வருகின்றனர்.

இன்னும் கண்ணுக்கே தெரியாத அளவிற்கு எத்தனையோ பொருட்களின் விலைகளில் சிறிய சிறிய மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. விலைவாசி ஏற்றமும் மக்கள் எதிர்நோக்கி வருகின்ற சிக்கல்களும் நாளுக்குநாள் கூடுகிறதே தவிர அவை குறைந்தபாடில்லை.

காஸ் விலை அதிகரித்ததை அடுத்து 'பழைய குருடி கதவைத் திறவடி' என்பதற்கிணங்க பழைய அடுப்புகளின் மீதான நாட்டம் அதிகரித்துள்ளது. மண்ணெண்ணெய் மற்றும் விறகுகளின் விலைகள் அதிகரிக்காமல் இருந்தாலே உத்தமம்.



LK Newspapers Viber Community

# விழிகள் இருப்போரே இக்காலத்தில் விழிப்பாக இருக்கவேண்டும்

யாருக்கும் உதவி செய்யாவிடினும் பரவாயில்லை; உபத்திரமாவது செய்யாமல் இருக்கவேண்டுமென பலரும் கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இன்றைய சூழ்நிலையில், 'உதவி' என்பதற்கப்பால் 'ஒரு மீற்றர்' தூர இடைவெளியே பலருக்கும் நினைவுக்கு வருகிறது.

யாருடனும் உரசிவிடக் கூடாதென்பதற்காக, அன்றாட பயணங்களை பலரும் வெகு கச்சிதமாய் திட்டமிட்டுக்கொள்வர். பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தவும் அஞ்சுகின்றனர். சொந்த வாகனங்கள் இல்லாதவர்கள், குறுகிய தூரப் பயணங்களை நடந்தே செல்கின்றனர்.

ஆனால், தங்களை யாரும் உரசி, கீழே தள்ளிவிட்டுவிடக்கூடாது; தடக்கியும் விழுந்துவிடக்கூடாது; வழிதவறிவிடக்கூடாது என்பதற்காகவே, விழிப்புலனற்றவர்கள் வெள்ளைப்பிரம்புகளை பயன்படுத்துகின்றனர். அவ்வாறானவர்கள் தங்களையும் பாதுகாத்து, மற்றவர்களுக்கும் சமிக்ஞை கொடுக்கின்றனர். ஒக்டோபர் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், வெள்ளைப்பிரம்புடன் பிரதான வீதிகளுக்கு வருவோர், நிலைதடுமாறாது பயணிப்பதற்காக, நடைபாதைகளில், பதிக்கப்பட்டிருக்கும். அந்தத் தீர்க்கதர்சனம்மிக்க திட்டம் வரவேற்கத்தக்கது. அதற்கப்பால் வெவ்வேறு மதிப்பைக்கொண்ட நாணயத்தாள்களைக் கூட இலகுவாக இனங்கண்டு கொள்ளும் வகையில், வடிவமைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு மனிதனும் அங்க சம்பூர்ணமாகவும் தேகாரோக்கியமாகவே வாழவிரும்புகின்றான். வாழ்க்கையோட்டத்தில் ஏற்படும் சில கவனயீனங்களால், தேகாரோக்கியத்தில் சிற்சில பாதிப்புகள் ஏற்படத்தான் செய்துவிடுகின்றது. இதனால் சில அங்கங்கள் செயற்றிறன்களை இழந்துவிடுகின்றன. திடீர் விபத்துகளின் ஊடாக அவயவங்களை இழந்துவிட்டவர்கள், வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்திச் செல்வதற்காக பெரும்பாடுபடுவர். இதனிடையே எந்தக் காட்சியையும் காணாது, மனத்துக்குள் படத்தைக்கீறி, வாழ்ந்துகொண்டிருக்கும் வெள்ளைப்பிரம்புகளை ஏந்தியிருப்போருக்கு இடையூறின்றியே ஏனையோரும் வாழவேண்டும்.

விழிப்புலனற்றவர்களின் வாழ்வில் வழிகாட்டும் ஒளிவிளக்காக வெண் பிரம்பு கருதப்படுகிறது. அவ்வாறானவர்களின் வழிநடைக்கான ஊன்றுகோலாகவும், உதவு சாதனமாகவும், அடையாளச் சின்னமாகவும் வெள்ளைப் பிரம்பு விளங்குகின்றது.

எதனையுமே பார்க்கமுடியாத விழிப்புலனற்றவர்கள், ஏதோவொரு வகையில் அறிவை பெற்றுக்கொள்வதற்காக, பெய்லி எழுத்துகள் மூலமாக கல்வி பயிலுகின்றனர். அவ்வாறானவர்கள், தேசிய பரீட்சைகளில் பல திறமைகளை வெளிகாட்டியிருந்தமை வெளிப்படையாகும். கொரோனா வைரஸ் தொற்று தீவிரமானதையடுத்து, வெள்ளைப்பிரம்புடன் வெளியில் திரிபவர்களை காணக்கிடைப்பது அரிதாகும். அவர்களுக்கான நேற்றைய நாள், பரந்தளவில் அனுஷ்டிக்கப்பட்டமைக்கு சான்றில்லை. அவர்களுடைய நாளையும் கொரோனா கொன்றுவிட்டது.

ஆனால், வெள்ளைப்பிரம்பை போல, பிளாஸ்டிக் குளாயில் தயாரிக்கப்பட்ட பிரம்பை பயன்படுத்தி, மக்களை ஏமாற்றி வாழ்வோரும் இருக்கதான் செய்கின்றனர். 'விழிப்புலனற்றோர்','ஏமாற்றுப்பேர்வழிகள்' தொடர்பில், விழிகள் இருப்போரே விழிப்பாக இருக்கவேண்டுமென்பது எமது அவாவாகும்.


# தமிழ்Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கொரோனா தொற்றின் தாக்கத்தைவிட, அது பற்றிப் பேசி, மக்களைக் கலங்க வைக்கும் கதைகளைச் சொல்லிச் சொல்லி, பயமுறுத்தி, கிலி பிடிக்க வைத்து, நெஞ்சத்தை நோகடிக்கும் நபர்களே அநேகர் உள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் அனைவரும், அறிய வேண்டிய சிலவற்றை அறிக:

இக்கால கட்டத்தில் குடும்ப நல்லுறவு அவசியம். இல்லத்தில் அனைவரும் ஒன்றிணைந்து, தங்கள் கடமைகளைச் செய்து வந்தால், புறத்தாக்கங்கள் தாக்காது; கலகலப்பாக இருங்கள்.

வீட்டுக்குள் இருக்கும்போது, சலிப்பு ஏற்படலாம். விருப்பமான உள்ளகப் பொழுதுபோக்கில், சுவாரஷ்யமாக ஈடுபடலாம். புத்தகங்களை வாசிக்கலாம். விரும்பிய பாடல்களைக் கேட்கலாம். தொலைக்காட்சியில் நல்ல விடயங்களைத் தரும் நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். கைத்தொழிலில் ஈடுபடுதல் போன்ற மனத்துக்குத் திருப்தியைத் தரும் பொன்னான காலத்தை உருவாக்கியபடியே தொடருங்கள்.

தேவையற்ற கதைகளைப் பேசும் நபர்களுடன் தொடர்பு வேண்டாம். எவராவது முகக்கவசம் அணியாத நபர்களுடன் பேசாமல் விலகுங்கள்.

சிலருக்குப் புத்திமதிகளை இதுபற்றிச் சொன்னால் பிடிக்காது. கண்டதையும் எண்ணவேண்டாம். நல்லதை நினைத்து சந்தோசமாக இருங்கள்.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

### வாக்குவாதங்களை உருவாக்கியிருக்கும்

# வளச் சுரண்டல் விவகாரம்

**லக்ஸ்மன்**

கிழக்கில் மாத்திரமல்ல, முழு நாட்டிலும் முக்கிய பேசு பொருளாக, அந்தந்தப் பிரதேசங்களின் வளங்கள் சுரண்டப்படுதல் மாறியிருக்கிறது. வடக்கு கிழக்கில் நீண்டகாலமாக கல், மணல் அகழப்பட்டுவந்தாலும் 2009இல் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னர் மிகப் பெரும் மாபியாவினுடைய தொழிலாக மாறி வளர்ந்திருக்கிறது. மண்ணினுடைய பாதுகாப்புப் பற்றிப் பேசியவர்களின் முக்கிய வருமானமீட்டும் துறையாகவும் இது இருக்கிறது.

இந்நிலையில்தான், வடக்கு- கிழக்கிலுள்ள வளங்களைக் கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்யத் தேவையான வேலைத்திட்டம் தமிழ் தேசிய கூட்டமைப்பிடம் இருக்கின்றது போன்ற விடயங்களை கடந்த நாடாளுமன்ற அமர்வில் இரா.சாணக்கியன் பேசினார். அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் மணல் அனுமதிபத்திரம் பெற்றுக்கொண்டுள்ளனர் என்ற ஒரு கருத்தையும் முன்வைத்தார். அது வெறும் கருத்தல்ல ஆதாரங்களையும் கூட வெளிப்படுத்தியிருந்தார். அதனையடுத்து நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சில விடயங்கள் சற்று விமர்சனத்துக்குரியவையாக இருக்கின்றன.

காரணம், உரையையடுத்து சாணக்கியாவே வெளியிட்ட நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கும் நிலையுள்ளதனால் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்திலும் மக்கள் பிரதிநிதிகள் உரையாற்றுவதற்கு அச்சங்கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை என்ன என்பது கூட தெரியாமல், கிழக்கு மாகாண ஆளுநர் நடந்துகொள்வது மிகவும் கவலையான விடயம்.

கிழக்கு மாகாண ஆளுநரை பொறுத்தவரையில், அவர் கிழக்கு மாகாணத்தில் முற்றுமுழுதாக தமிழ் பேசும் மக்களுடைய விடயங்களை சரியான வகையில் கையாளாதவராகவே இருந்துவருகிறார். கிழக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடுகள் பொலிஸாரையும் நெருக்கடிக்குள் தள்ளும் செயற்பாடாகவேயுள்ளது.

அவருடைய களுவாஞ்சிகுடியிலுள்ள அலுவலகத்திற்கு திருகோணமலையிலிருந்து வருகை தந்திருந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் கடந்த 10.09.2021 சிங்கள பத்திரிகையொன்றில் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்திருந்த செய்தியொன்று வெளிந்திருந்தது. அதில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்த கருத்தினை வைத்து ஆளுநரினால் சிரேஸ்ட பொலிஸ்மா அதிபரிடம் 09ம் திகதி ஒரு முறைப்பாடு செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தமை தொடர்பில் விசாரணை செய்யவுள்ளதாகக் கூறியிருக்கிறார். அதே போன்று கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் கிழக்கு மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் மண் அகழ்வு விடயமாக கேட்கவிரும்புவதாக கூறியிருக்கிறார்.

கிழக்கில் கடந்த காலத்தில், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரைக் காணி விடயம் பூதாகாரமாகவே மாறியிருக்கிறது. ஆனால் அது தொடர்பிலான வர்த்தமானிப் பிரகடனத்தினை வெளியிடுவதற்கான வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. ஆனால், அதில் கிழக்கு மாகாண ஆளுநரின் செயற்பாடுகள் தொடர்பில் பல விமர்சனங்கள் உள்ளன. மண் மாபியாக்களை கட்டுப்படுத்தல் குறித்த அணுகுமுறைகள், மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் அவர் நடந்துகொள்ளும் விதங்கள், கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நலன்களை விட ஏனையவர்களின் நலனையே நோக்காகக் கொண்டதாக இருக்கிறது என்ற விமர்சனத்தையும் சாணக்கியன் முன்வைத்திருக்கிறார்.

சாணக்கியனுடைய மணல் அகழ்வு தொடர்பான நாடாளுமன்ற உரையை அடுத்து ஊடக சந்திப்பொன்றை நடத்திய இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், சாணக்கியன் முதலில் தமிழ் மொழியை கற்க வேண்டும்; மண்அனுமதி பத்திரம் சம்பந்தமாக எனது தம்பிக்கு எவ்வித தொடர்புகளும் இல்லை. வெறும் அரசியலுக்காக இவ்வாறு உண்மைக்கு புறம்பான தகவலை வெளியீட்டியிருக்கின்றார். எனது தம்பி மண் அனுமதி பத்திரம் வைத்துள்ளதாக உண்மைக்கு புறம்பான தகவலை வெளியீட்டிருந்தார். அரசியலுக்காகவும் எதிர்வரும் தேர்தலுக்காகவும் ஆதாரமில்லாத தகவலை தெரிவித்திருக்கிறார். ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் எந்த வித மண்அனுமதி பத்திரமும் எனது தம்பிக்கு இல்லையென ஆதாரம் எம்மிடம் உள்ளது. அவர் சண்முகநாதன் மயூரன் என்பதனை தவறுதலாக சாதாசிவம் மயூரன் என தெரிவித்திருக்கிறார் என்று கூறியிருந்தார்.

அத்துடன், எமது மாவட்டத்தை நானும் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தனும் எமது கட்சி அமைப்பாளர் சந்திரகுமாரும் மக்களுக்காக பல நன்மையுள்ள அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகிறோம். இதனை தடுக்கவே இவர் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெக்கின்றார். நீங்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முன்வருங்கள். மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளை தடுக்காமல் இதனை தடுக்க இணைந்து பணியாற்ற முன்வாருங்கள் என்றும் வியாழேந்திரன் தெரிவித்திருக்கிறார்.

இக்கருத்தானது ஏட்டிக்குப் போட்டியானதாக இருந்தாலும் கிழக்கு மண்ணில் இல்லாத ஒன்று விவாதிக்கப்படவில்லை. அரசியல்வாதிகள் தங்களுடையதும், தங்களுக்குத் தெரிந்தவர்களுடையதும் எனப் பல பினாமிகளை வைத்துக் கொண்டு தமது வருமானத்துக்கான தொழிலாக மணல் அகழ்வினை நடத்திவருகின்றனர் என்பதுவே மக்கள் மத்தியில் பதிவாகியிருக்கின்ற உண்மையாகும்.

அதே போன்று, ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத்திட்டத்தின் கீழான சௌபாக்கிய உற்பத்தி கிராமங்களை உருவாக்கும் வேலைத்திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரையாற்றியுள்ள மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இந்த நாட்டின் பொருளாதாரம் தாழ்த்தப்பட வேண்டும் என்று செயற்படுகின்ற அரசியல் சக்திகளின் மத்தியிலேயே மாற்று சிந்தனையுடன் இந்த நாட்டினை கட்டியெழுப்பும் பணிகளை முன்னெடுத்துவருகிறோம் என்று தெரிவித்திருக்கிறார். இவருடைய கருத்தும் ஒருவகையில் சாணக்கியனுடைய நாடாளுமன்ற உரை தொடர்பிலான உறுத்தலாகவே பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாகவே நடைபெற்று வருகின்ற கல், கிறவல், மணல் அகழ்தலானது வருமானமீட்டுகின்ற ஆக்கிரமிப்பு சார் தொழிலாக இல்லாமல், மக்களது வாழ்வாதாரத்தினையும் வாழ்க்கையினையும் பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர். இந்த நிலையினை உருவாக்குவதற்காகவும் வளச் சுரண்டல்களைக் கட்டுப்படுத்துவதற்காகவும் மக்கள் பல இடங்களில் ஆர்ப்பாட்டங்களையும், கவனயீர்ப்புப் போராட்டங்களையும் நடத்தியிருந்தாலும் அவற்றால் பயன் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. மக்களுக்குப் பயன்கள் கிடைப்பதனைவிடவும் அதிகாரம் படைத்தவர்களுக்கு வருமானம் அதிகரிப்பதையும் பயன் கிடைப்பதனையுமே நிருவாகத்தரப்பினர் விரும்புகின்றனர் என்பதே இதற்குக் காரணம்.

கட்டட அமைப்பதென்பது இருப்பு சார்ந்த ஒன்று. ஆனால் சாதாரண மக்கள் தங்கள் வாழ்க்கையையே இதற்காக அர்ப்பணம் செய்துவிட வேண்டும் என்ற நிலைமையே இந்த மாபியாத் தனமான மணல் அகழ்வினால் உருவாகியிருக்கிறது. சாதாரணமாக 10ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மணல் இப்போது 30 ஆயிரம் ரூபா வரை விலையேற்றம் பெற்றுள்ளது. இதற்கான காரணம் வெளி மாகாணங்களை, மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும், அவர்களுடைய இடங்களுக்கும் வெளி நாடுகளுக்கு மணல் விற்பனை செய்யப்படுவதுமாகும். இதற்கு மாற்றீடான செயற்பாடொன்றை அரசாங்கம் முன்நகர்த்த வேண்டும். குறிப்பிட்ட மாவட்டத்திலேனும் கட்டுப்பாட்டு விலை ஏற்படுத்தப்படுவது சிறந்த பரிகாரமாக இருக்கும்.

மண் வளமானது தொடர்ச்சியாக அகழப்படுவதனால் மாவட்டத்தில் பல்வேறு குற்றச்செயல்கள் நடைபெறுவதுடன், வெள்ளம், மண்சரிவு, ஆறு கொள்ளல் போன்ற அனர்த்தங்களும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. அனுமதிப்பத்திரங்கள் வெறுமனே விவரங்கள், பத்திரங்களின் சரிபார்த்தலுடன் மாத்திரம் முடிவுக்கு கொண்டுவரப்படாமல் அளவுகளுக்கேற்பவும் இருப்புகளுக்கேற்பவும் நடைபெறவேண்டும். அவ்வாறில்லாமல் நினைத்த இடங்களிலெல்லாம் மணல் அகழ முடியும் என்ற தன்மையில் புவிச்சரிதவியல் அளவை சுரங்கப்பணியகத்தினால் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வளங்கள் சுரண்டப்படுவதானது, பிரதேசங்களில் அபிவிருத்திகள் என்று சொல்லப்படுகின்ற வீதிகள் போடப்படுதல், வடிகான்கள், கட்டடங்கள் அமைக்கப்படுதல் என்பவற்றுக்கப்பால் மக்களின் வாழ்வாதாரங்கள் இழக்கச் செய்யப்படுதல், இயலாத நிலையை உருவாகச் செய்தல், அனர்த்தங்களை எதிர் கொள்ளல், அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாத நிலை உருவாதல் போன்ற பாதகங்களைக் கொண்டுவருமானால் பிரதேச, மாவட்ட, மாகாணம் என்பதற்கப்பால் நாட்டைப் பாதகமான பாதாளத்துக்கே கொண்டு செல்லும் என்பதில் சந்தேகமில்லை. வெளித் தோற்றங்களுக்கப்பால் உள்ளே இருப்பவைகள் சிறப்பாக அமையும் போதுதான் அதன் பெயர் சரியான அபிவிருத்தியாக இருக்கும்.

## கடிதங்கள்

### கிளிவெட்டி, பாரதிபுரம் பிரதேசத்தில்

# யானைகளின் தொல்லையை தடுக்கவும்

திருகோணமலை, கிளிவெட்டி, பாரதிபுரம் பிரதேசத்தில், உட்புகுந்த காட்டு யானைகள், இரண்டு வீடுகளை பகுதியளவில் சேதப்படுத்தியுள்ளதோடு பயன்தரும் மரங்களையும் சேதப்படுத்தியுள்ளன.

இதன்போது வாழை, தென்னை, மரவெள்ளி உள்ளிட்ட பயன்தரும் மரங்களை சேதப்படுத்திச் சென்றுள்ளது.

இவ்வாறு, தொடர்ச்சியாகத் தமது கிராமத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும், தமது வாழ்வாதாரத்தை நோக்கமாகக் கொண்டு, தாம் கஷ்டப்பட்டுச் செய்கின்ற பயன்தரும் மரங்களை, காட்டுயானைகள் சேதப்படுத்துவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை ஊருக்குள் காட்டு யானைகள் இவ்வாறு அட்டகாசம் புரிவதால், வீடுகளில் தூங்குவதும் அச்சமாக உள்ளதாகவும் கிளிவெட்டி - பாரதிபுரம் பிரதேச மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

தினமும் மாலை வேளையில், யானை வரும் என்ற அச்சத்தில், வேளையுடன் இரவு உணவை அருந்திவிட்டு, தமது வீட்டில் தனித்து இருக்க அஞ்சி, உறவினர்களுடன் கூட்டாக தங்கி வரும் நிலை நீடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, இது விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு காட்டு யானைகள் ஊருக்குள் உட்புகாத வகையில் யானை பாதுகாப்பு வேலி அமைத்து தருமாறு கிளிவெட்டி - பாரதிபுரம் பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

-ஹஸ்ஸான் அஹமட்



# எது வறுமை?

## நாளை (17) உலக வறுமை ஒழிப்பு நாள்



என்.ஜி. மிருணாளினி

உலக நாடுகளை பீடித்திருக்கும், கொரோனா நிதி நெருக்கடிகளால், மேலும் 10 கோடி மக்கள் வறுமை நிலைக்குள் தள்ளப்படலாம் எனவும் தற்போது சுமார் 1.4 பில்லியன் மக்கள் தீவிர வறுமையில் வாடுவதாகவும் ஐ.நா அச்சம் தெரிவித்துள்ளது. வறுமையை ஒழிக்கும் பணியில், விவசாய உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டியது, நம் ஒவ்வொருவரினதும் முக்கிய கடமையாக கொள்வோம்.

இதனால்தான், கொரோனா முடக்கத்தின் பொழுதிலும் வைத்தியத்துறை, பாதுகாப்புத்துறை, ஊடகத்துறைகளுக்கு மத்தியில் விவசாயத்துறைக்கும் அரசு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை எந்தநேரத்திலும் உணவு உற்பத்தியில் ஈடுபடும்பொருட்டு சென்றுவரும் வகையில் கௌரவத்தை வழங்கியிருந்தது.

உலகில் ஒருவர் வறுமையால் பாதிக்கப்பட்டால், அங்கு அவரது மனித உரிமை மீறப்படுகிறது என்கிறார் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜோசப் ரெசின்கி. இவர் சிறு வயது முதலே வறுமைக்கு எதிராகப் போராடினார். இவரது முயற்சியால், உலக வறுமை ஒழிப்பு தினம் 1987 ஒக்டோபர் 17இல் உருவாக்கப்பட்டு ஐ.நா சபையால் அங்கிகரிக்கப்பட்டது.

வறுமையை ஒழிக்கவும் அனைவருக்கும் அடிப்படை வசதிகள் கிடைப்பதை உறுதி செய்யவும் உலக நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐ.நா வலியுறுத்துகிறது. ஒருவர் கூட வறுமையில் இருக்கக்கூடாது; வறுமையால் உருவாகும் வன்முறைக்கு முடிவு: யோசித்து முடிவெடுத்து வறுமைக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்பட அழைப்பு விடுத்து வலியுறுத்தியுள்ளது.

எது வறுமை எனும்போது, அனைவருக்கும் சுத்தமான தண்ணீர், சத்தான உணவு, மருத்துவம், வேலைவாய்ப்பு, சுகாதாரம், கல்வி, உடை, இருப்பிடம் கிடைக்க வேண்டும். இவை இல்லாத அனைவரும் வறுமை நிலையில் இருப்பவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். வறுமையும் பட்டினியும் வன்முறைக்கு வழிவகுக்கிறது.

உலக மக்கள் ஏழ்மை நிலையில் தள்ளப்படுவதற்கு சுயநல அரசியல்வாதிகள், ஊழல், இலஞ்சம், கல்வியறிவின்மை, வேலைவாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு, புதிய தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தாமல் இருப்பது எனப்பல்வேறு காரணங்கள் உள்ளன. இருப்பினும் முக்கிய காரணம், ஏழை மக்களின் பசியை போக்குவதற்கு அரசாங்கத்துக்கு உண்மையான அக்கறையில்லாதது தான் என அறிப்பட்டுள்ளது.

உலகில் ஏற்படும் மரணங்களில், அதிகம் வறுமையால் தான் ஏற்படுகிறது. உலகில் சராசரியாக 87 கோடி பேர், போதிய உணவின்றி வறுமையில் பாதிக்கப்பட்டுள்ளனர். 100 கோடி பேருக்கு சுத்தமான குடிநீர் வசதி இல்லை. இதில் 40 கோடி பேர் சிறுவர்களாவர்.

ஏழ்மை நிலையில் இருப்பவர்களை, ஒரே நாளில் வசதியானவர்களாக மாற்றிட முடியாது. ஆனால், இப்போதிருந்து பல தொலைநோக்கு திட்டங்களை தீட்டினால், வரும் சந்ததியினரும் தொடர்ந்து வறுமைக்கோட்டிலேயே வசிப்பதை தவிர்க்கலாம். கல்வி, வேலைவாய்ப்பு வழங்கினால் வறுமை ஒழியும்.

சர்வதேச ரீதியில் வறுமை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், வறுமை காரணமாக மரணமடைந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும், பசிக் கொடுமையில் இருந்து மக்களை விடுவிப்பதற்காகவும் ஐக்கிய நாடுகள் சபை வறுமை ஒழிப்புத் தினத்தை அனுஷ்டித்து வருகின்றது.

வறுமை நிலை காரணமாக உலகளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவ வேண்டியதன் அவசியம் குறித்து, அனைத்து தரப்பினரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கத்துடன் வறுமை ஒழிப்பு தினத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


உலகளாவிய ரீதியில் வறுமை சடுதியாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக வொஷிங்டனில் நடைபெற்ற நிதி மற்றும் வளர்ச்சித் துறை மாநாட்டில் (2009) எச்சரிக்கப்பட்டிருந்தது.

உலக வங்கியின் 185 உறுப்பு நாடுகளினதும் அமைச்சர்கள், சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் கலந்து கொண்ட நிதி மற்றும் வளர்ச்சித் துறை மாநாட்டில், நிதி நெருக்கடி நீண்டகாலத்துக்கு நீடிக்கும் பட்சத்தில் உலக வங்கிக்கான வளங்களை மேலும் அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்படலாமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் உணவுப் பஞ்சம், பிணி, வறுமை, வேலையின்மை ஆகியவற்றை ஒழிக்க அபிவிருத்தியடைந்த நாடுகள் வழங்க ஒப்புக் கொண்டுள்ள நிதி உதவிகளை நிறுத்தக் கூடாது என்றும், உறுதியளிக்கப்பட்ட உதவிகளை தொடர்வதன் மூலமாக உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது, புவி வெப்பமடைதலால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். ஆனால் உலகில் தற்பொழுது நிலவும் பொருளாதார பின்னடைவின் காரணமாக முன்னேறிய நாடுகளில் நிலவும் பொருளாதாரச் சூழல், முன்னேற்ற இலக்குகளை எட்டுவதில் பெரும் முட்டுக்கட்டையாக இருக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறாக திட்டங்கள் தீட்டப்பட்டாலும் கூட, அறைகூவல்கள் விடுக்கப்பட்டாலும் கூட, வறுமை காரணமாக பள்ளிக்கு செல்லாத குழந்தைகளின் எண்ணிக்கை 12 கோடிக்கு மேல் என சில புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உலக நாடுகள் இராணுவ தளவாடங்கள் வாங்கும் செலவில் ஒரு சதவீதத்தை ஒதுக்கினால் கூட, உலகில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க வழி செய்து விடலாம் என திட்டமிடப்பட்டது. எனினும் அனைவருக்கும் கல்வி என்பது



உலகளாவிய ரீதியில் இன்று வரை கனவாகவே உள்ளது. வசதிபடைத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையேயான இடைவெளி வரவர அதிகரித்துக்கொண்டே வருகிறது. அபிவிருத்தியடையாத 48 நாடுகளின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, உலகின் முதல் மூன்று பணக்காரர்களின் சொத்து மதிப்பை விட குறைவு என மதிப்பிடப்பட்டுள்ளது.

உலக பணக்காரர்களில் 20 சதவீதம் பேர் உலகின் மொத்த வளங்களில் 86 சதவீதத்தை கைப்பற்றியுள்ளனர். மீதமுள்ள 80 சதவீத மக்களுக்கு கிடைப்பது வெறும் 14 சதவீதம் மட்டுமே.

ஏழ்மைக்கு முக்கிய காரணமாக ஊழல் உள்ளது. வறிய நாடுகளின் முன்னேற்றத்துக்கு தடையாக உள்ள ஊழலை வளர்ந்த நாடுகளின் பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக்கொள்கின்றன. அதிகாரிகளை வளைக்கவும் ஒப்பந்தங்களை கைச்சாத்திடவும் முறைகேடான வழிகளில் பணத்தை செலவிடும் இந்த நிறுவனங்கள், ஏழை நாடுகளின் குடிமக்களின் வரிப்பணத்தை தெரிந்தே சுரண்டுகின்றன.

குற்றங்கள் அதிகரிக்க வறுமையும் ஒரு காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. வறுமையும் ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்த சமூகத்தில், வன்முறையையும் குற்றங்களையும் தவிர்க்க முடியாது. உலகளாவிய ரீதியில் மக்கள் தொகை கூடிய நாடான சீனாவில் வறுமை ஒழிப்பு சாதனை, உலகின் வறுமை ஒழிப்பு முன்னேற்றப் போக்கைத் தூண்டி, உலக வறுமை ஒழிப்புப் பணிக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

ஐ.நாவின் புத்தாயிரமாண்டு வளர்ச்சி இலக்குகளில், வறிய மக்கள் தொகையைப் பாதியாகக் குறைப்பது என்ற இலக்கை முன்கூட்டியே நனவாக்க முனையும் ஒரு நாடாகவே சீனா உள்ளது. அதேநேரம் இந்தியாவும் வறுமை ஒழிப்புக்காக வேண்டி பாரிய பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது.

வறுமையில் வாடும் குடும்பங்களை ஒரே தேவையுள்ள குழுக்களாக (Common Interest Groups - CIG) ஒன்றிணைத்து அவர்களின் முழுமையான மேம்பாட்டிற்கான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அளிக்கும் மாவட்ட வறுமை ஒழிப்புத் திட்டத்தை உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் 2000வது ஆண்டு முதல் இந்திய மத்திய அரசு செயற்படுத்தி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# இருளைக் கலைத்து ஒளியேற்றுவோம்

## சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் நேற்றாகும்



இ. நடராஜன்




கொவிட்-19 பெருந்தொற்றுப் பரவும் இக்கால கட்டத்தில், முகக் கவசங்களை அணிந்து கொண்டு இருப்பதன் சிரமம் ஒருபக்கம் இருக்க, அவ்வப்போது அது கண்களை மறைப்பதைத் தொந்தரவு தருவதாகச் சினக்கின்றோம். எனினும், இருளே உலகமான, பார்வையற்றோருக்குப் பாதுகாவலனாகவும் வழிகாட்டியாகவும் வெள்ளைப் பிரம்புகளே திகழ்கின்றன.

வீதிகளில் சிலர் வெள்ளை பிரம்புகளுடன் மிகவும் அவதானமாக வீதியைக் கடப்பதை பார்த்திருப்பீர்கள். எனினும், கண்கள் நன்றாகப் பார்வை இருந்தும், அதிகளவு விபத்துகளைச் சந்திக்கும் எம்மவர்களை என்னவென்று சொல்வது?

நமது உள்ளத்து உணர்ச்சிகளைப் பிரதிபலிப்பவை கண்களே. கண்களில் உண்டாகிற பிரச்சினைகள், ஆரோக்கியத்துக்கு மட்டுமின்றி, அழகுக்கும் உகந்ததல்ல. இந்த உலகத்தைக் கண்டு இரசிப்பதற்கு, நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிசய உறுப்பு கண்களாகும்.

மனிதனின் கண் என்பது, ஒளியை உணர்வதற்கு உதவும் ஓர் உறுப்பாகும். வெவ்வேறு விதமான ஒளியை உணரும் உறுப்புகள் விலங்குகளிடையே காணப்படுகின்றன. மிக எளிய கண்கள், சுற்றுப்புறத்தில் உள்ள ஒளி அல்லது இருளை கண்டு உணரவல்லவை.

உலக வெள்ளைப் பிரம்பு தினம், 1961 முதல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 15 ஆம் திகதி விழிப்புலனற்றோருக்கான வெள்ளைப் பிரம்பு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இதன் பின்னணியை ஆராய்வோமாயின், அது எம்மை இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக் காலகட்டத்துக்கு இட்டுச் செல்கின்றது.

பெரும் அழிவுகளையும் அவலங்களையும் உலகுக்கு விட்டுச் சென்ற இரண்டாம் உலக மகா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட அணுகுண்டு, ஜப்பானில் ஹிரோஷிமாவிலும் நாகசாகியிலும் வீசப்பட்ட பரிதாபக் கதை ஒரு கண்ணீர் காவியமாகும்.

இன்றும் கூட இப்பகுதிகளில் பிறக்கின்ற குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறப்பதையும் செய்திகள் மூலம் அறிகின்றோம். அவற்றுள் முக்கியமான ஒன்றாக, யுத்தத்தை அடுத்து உருவாகிய கண்பார்வை அற்றோரின் கதையோ பெரும் பரிதாபமாகும்.

ஜப்பானில் பெருமளவானோர் கண்பார்வை இழக்கவே, அதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்காக, அவ்வேளை பிரபல்யமாக இருந்த டொக்டர் சிலியை மக்கள் நாடினர். தம்மை நாடி வந்தோரில் கூடியளவிலானோரின் பார்வையை வைத்தியரால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. இத்தகையதொரு பரிதாபகரமான நிலைமையை எதிர்நோக்கிய சிலி, கண்பார்வை இழந்தோரையும் சமூகத்தில் நடமாட வைப்பதற்கு வழிதேடினார். அதன் பிரதிபலனாக உருவானதே வெள்ளைப் பிரம்பாகும்.

ஓர்இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு ஆபத்து ஏற்படாத வண்ணம் நகர்வதற்குப் பயன்படுத்திய முறையில் வெள்ளைப் பிரம்பு மகத்துவம் பெறுகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக, வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்தி வருவோர் விழிப்புலனற்ற ஒருவர் என்ற வகையில், விழிப்புலன் உள்ளோர் உறுதுணையாக அமைவதற்கு இவ்வெள்ளைப் பிரம்பு காரணமாக உள்ளது.

சன நெரிசலும் போக்குவரத்து சாதனங்களின் அதிகரிப்பும் பாதைகளைக் கடக்கும் போது ஏற்படும் நெருக்கடிகளும் சாதாரண மக்களையே திக்கு முக்காடச் செய்யும்போது, வெள்ளைப் பிரம்பைப் பயன்படுத்தி, தம்மை இனங்காட்டியவாறு மேற்குறிப்பிட்டத் தடைகளை தாண்டிச் செல்வதும் இவ்வெள்ளைப் பிரம்பின் உதவியாலேயே ஆகும்.

வெள்ளைப் பிரம்பை உருவாக்கி, அதை விழிப்புலனற்றவர்களின் கையில் துணையாகக் கொடுத்து, எவரது உதவியுமின்றித் தாமாகவே நகருவதற்கு, ஒரு மனிதாகவே உதவுவது, விழிப்புலனற்றோருக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும். இதற்கான உலக அங்கிகாரம் 1969 இல் கிடைத்தது.

விழிப்புலனற்ற இவர்கள் அங்கவீனர்கள் என்ற வரிசையில் நிரற்படுத்தப்படுகின்ற போதும் ஏனைய அங்கவீனர்களை விடவும் கல்வித்துறை உட்பட இதர பல செயற்பாடுகளிலும் துலக்கம் பெற்று வருகின்றனர். இவர்கள், பல்கலைக்கழகம் வரை முன்னேறியுள்ளதோடு கணினி, தொலைத் தொடர்புக் கல்வி போன்ற இன்னோரன்ன பல துறைகளிலும் முன்னேறி வருகின்றனர்.

சாதாரண மாணவர்களுக்கும் ஏனைய மனிதர்களுக்கும் தாம் எந்த வகையிலும் சோடை போக வில்லை என்பதையே கல்வித் துறையிலான அவர்களுடைய சாதனைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. கல்வியைத் தேடவும் அதற்காக நகரவும், இவ்வெள்ளைப் பிரம்பு அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது, நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டிய விடயமாகும்.

கண்பார்வை அற்றோருக்கு வழிகாட்டியாகத் திகழும் வெள்ளைப் பிரம்பின் மகத்துவத்தை போற்றும் வகையில் சர்வதேச ரீதியல் கடைப்பிடிக்கப்படும் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் நேற்று (15) கடந்து சென்று இருப்பினும், இவர்களுக்காக பிரார்த்திப்பதுடன் நம் வாழ்நாளில் ஒருவருக்காவது ஒரு வெள்ளை பிரம்பினை தானம் செய்வோமாக!



மேலும், போக்குவரத்து திணைக்களத்தின் ஏற்பாட்டில் சாரதிகள் விபத்தின் போது மரணிப்பின், அவர்களது விருப்பத்தில் உடல் உறுப்புகளை தானம் செய்யும் முறையை, அவர்களது சாரதி அனுமதி பத்திரத்தில் உள்ளடக்கி உள்ளமை சிறப்பம்சமாகும். எனவே, எதிர்வரும் காலங்களில் தங்களது சாரதி அனுமதிப்பத்திரத்தினைப் புதுப்பிக்கும் சாரதிகள், தங்களது சாரதி அனுமதிபத்திரத்தில் இதனை உள்ளடக்குமாறு விண்ணப்பிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இதனை நாமும் செய்வோம். இருளைக் கலைத்து, ஒளியேற்றுவோம்.

LK Newspapers Viber Community



கட்டைபறிச்சான்

# இனிப்பும் கசப்பும்

## பாலமும் அதையண்டிய இயற்கை அழகும் பாதுகாக்கப்பட வேண்டும்



அ . அச்சுதன்



திருகோணமலை மாவட்டத்தில் மூதூரையும் மூதூர் கிழக்கையும் எல்லைப்படுத்தும் வகையில் சலசலத்து ஓடிக்கொண்டிருக்கும் கட்டைபறிச்சான் ஆறு, பல தனித்துவங்களைக் கொண்டதாகும். மகாவலி கங்கையின் கிளை ஆறாக, அல்லைக்குளத்தில் இருந்து மேலதிக நீர் வெளியேறி, இறையாற்று வழி ஆற்றின் ஊடாக கட்டைபறிச்சான் பாலத்தைக் கடந்து, கடலுடன் சங்கமிக்கின்றது.

இப்பகுதி, இயற்கையின் ரம்மியங்கள் நிறைந்த பல ஆச்சரியங்களைக் கொண்டமைந்து உள்ளது. கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய ஆற்றுப் பகுதியில் நிறைந்திருக்கும் கண்டல் தாவரங்களின் அழகு, பாலத்தைக் கடந்து செல்வோரை ஒருமுறை இறங்கவைத்து, 'செல்பி' ஒன்றைப் படம்பிடிக்காமல் முன்நகர மனம் இடம்கொடுக்காது. அதுமட்டுமல்லாமல் அவை மூதூர் கிழக்குக்கும் மூதூர் நகருக்கும் அழகுக்கு அழகு சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளன.

இவ்வாறு, கட்டைபறிச்சான் பாலத்தை அண்டிய பகுதிகளில் நிறைந்திருக்கும் கண்டல் தாவரங்கள், தான் செழித்து வளர்ந்திருக்கும் இடத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் பங்காற்றி வருகின்றன. இதில் முக்கிய பங்கு, இதன் இலை குழைகள் கீழ்விழுந்து, நீர்மூலம் கடத்தப்பட்டு, அங்குள்ள களப்பு, கழிமுகம் பகுதிகளில் மீன் இனங்கள் தமது இனப்பெருக்க இடமாகப் பயன்படுத்திக் கொள்ள உதவுகின்றன. குறிப்பாக, நண்டு, மீன் இனங்களின் இனப்பெருக்கம், இளம் குஞ்சுகளின் வளர்ச்சி போன்றவற்றுக்கு ஏற்ற சிறந்த சூழல் இங்கு காணப்படுகின்றது.

சுழல் காற்று, சூறாவளி போன்றவற்றால் ஏற்படும் அழிவுகளையும் கண்டல் தாவரங்கள் தடுக்கின்றன. பொதுவாக கண்டல்தாவரங்கள், இயற்கையின் சீற்றங்களைத் தணித்து, அவற்றின் வீரியத்தைத் தானே தாங்கிப் பாதுகாக்கின்றது. அதாவது, சக்தியை உறிஞ்சுகின்ற தன்மையைக் கொண்டுள்ளன.

இயற்கை அருளிய அழகும் அவற்றின் தனித்துவ அம்சங்களும் இவ்வாறு இருக்கும் நிலையில், கட்டைபறிச்சான் பாலத்தையும் அதன் தனித்துவங்களையும் அடகுவைப்பதுபோன்ற கைங்கரியங்கள் அரங்கேறிவருவது மனத்தைக் கனக்கவைத்து, முகம்சுழிக்க வைக்கின்றன.

கட்டைபறிச்சான் பாலம், தனக்கென்று ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது. பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தின்போது, அதாவது 1900 ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர், இந்த ஆற்றைக் கடப்பதென்பது, பெரும் சவாலானதும் ஆபத்தானதுமாகக் காணப்பட்டது. அக்காலப்பகுதியில், 'இடிமண் துறை' என்று அழைக்கப்பட்ட இத்துறையைக் கடக்க சிறிய வள்ளங்கள் பயன்பட்டன.

1929 இல் பிரிட்டிஷ் அரசால் இரும்பிலான மிதவைப் பாலம் போடப்பட்டிருந்தது. இந்த மிதவைப் பாலமும் பலசவால்கள் நிறைந்ததாக இருந்ததால், தற்போதுள்ள பாலம், 1976 தை மாதம் 31 ஆம் திகதி அடிக்கல் நாட்டப்பட்டு, 1978 இல் மக்கள் போக்குவரத்துக்காக திறந்து வைக்கப்பட்டது. இந்த வரலாற்றுப் பணியை, அப்போதைய தகவல் ஒலிபரப்பு பிரதியமைச்சரும், திருகோணமலை மாவட்ட அரசியல்வாதியுமான ஏ.எல்.அப்துல் மஜீத் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இரவு-பகல், மழை-வெயில் என்று பாராது, 43 ஆண்டுகளாக மக்களின் சுமையைத் தாங்கிநின்ற இந்தப் பாலம், இன்று உடைந்தும் வெடித்தும் காணப்படுகின்றது. கட்டைபறிச்சான் பாலமானது, தற்போதைய நிலையில் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றே உள்ளது. மூதூர் கிழக்கு பிரதேசத்துக்குள் பிரவேசிப்பதற்கான பிரதான பாலம் இதுதான். இப்பாலம் உடைந்துவிடுமாயின் அப்பகுதிக்கான தரைப்போக்குவரத்து தடைப்படும் அபாயம் உள்ளது. இவ்வாறு இதன் முக்கியத்துவம் இருக்கும் பொழுதிலும், இதுவரை புனரமைப்புக்கான வேலைகள் இடம் பெறவில்லை என்பது, மூதூர் கிழக்குப் பகுதி மக்களை அச்சம்கொள்ள வைத்துள்ளது.

விரைவில் இப்பாலத்தைப் புனரமைக்காதுவிடின், மூதூர் கிழக்கில் உள்ள கட்டைபறிச்சான், சேனையூர், கடற்கரைச்சேனை, சந்தோசபுரம், சம்பூர், கூனித்தீவு, சூடைக்குடா, பாட்டாளிபுரம், இளக்கந்தை, பள்ளிக்குடியிருப்பு உட்பட சுமார் 13 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 8,000 இற்கும் மேற்பட்ட மக்களின் ஜீவனோபாயம், சுகாதாரம், கல்வி, தொடர்பாடல் என்பன முற்றுமுழுதாகப் பாதிக்கப்பட்டுவிடும் என்பதால், அவசரமாகவும் அவசியமாகவும் அக்கறை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்குக் காரணம், மூதூர் கிழக்குப் பிரிவிலுள்ள கிராம மக்கள், தமது தேவைகளை நிறைவு செய்வதற்கும் தாம் உற்பத்தி செய்யும் விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் கட்டைபறிச்சான் பாலத்தை கடந்துதான் மூதூர் நகருக்கு செல்ல வேண்டும் .

மூதூர் கிழக்கில் சம்பூர், சேனையூர், பாட்டாளிபுரம் பகுதிகளில் பிரதேச, கிராமிய வைத்தியசாலைகள் இயங்குகின்ற போதிலும் மேலதிக சிகிச்சைகளுக்கு இப்பகுதி மக்கள், மூதூர் நகருக்குத்தான் செல்ல வேண்டும். சம்பூர் - மூதூருக்கான பிரதான போக்குவரத்துக்கும் இப்பாலம் முக்கியத்துவம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு, மக்களின் வாழ்வாதாரத்துக்கும் வாழ்வியலுக்கும் முக்கியத்துவம் மிக்க இந்தப் பாலம், இராணுவ ரீதியிலும் முக்கியத்துவம் பெற்றதாக இருந்துள்ளது. அதன்காரணமாக, 1985 இல் திருகோணமலை மாவட்டத்தில் முதலாவது கண்ணிவெடி தாக்குதல், இப்பாலத்தின் மீதுதான் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவ ஜீப், இப்பாலத்தில் சென்றுகொண்டிருந்தபோது, தமிழீழ விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகி இருந்தமையும், இந்தப் பாலத்தின் முக்கியத்துவம் கருதி இங்கு நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கது.

இராணுவ நடவடிக்கைகளின் போதும், மூதூர் கிழக்கு மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் போதும் கனரக வாகனங்களின் போக்குவரத்து காரணமாக, இந்தப்பாலம் தற்போது தனது உறுதியான தன்மையை இழந்து காணப்படுகின்றது.

பாலம் சேதமடைந்த விடயம் பலராலும் அறியப்பட்டிருந்தாலும் பாலம் புனரமைப்புக்கான எந்த நடவடிக்கையும் எவராலும் மேற்கொள்ளப்படாத நிலையில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், கடந்த 02, 03-07-2021 ஆகிய இரண்டு தினங்கள், பாலத்தைப் புனரமைப்புச் செய்யும் நோக்கத்துடன் கள விஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மூதூர் பிரதேச சபையின் கட்டைபறிச்சான் வட்டார உறுப்பினர் திருமதி த. ஜெயமாலாவின் கோரிக்கையை ஏற்று, மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ.அருஸின் அழைப்பின் பேரில் வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர், பாலத்தின் சேதங்களையும் சுற்றாடலையும் பார்வையிட்டிருந்தார்.

பாலத்தின் நிலை இவ்வாறு இருக்க, பாலத்தை அண்டிய வீதிக்கு அருகில், சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரதேச சபையால் பயன்படுத்தப்பட்ட குப்பை மேடு, பல முறைப்பாடுகளின் பின்னர் அகற்றப்பட்டதுடன் சுற்று வேலியும் அமைக்கப்பட்டு, சுற்றாடல் பாதுகாக்கப்பட்டது.

ஆயினும், தற்போது மீண்டும் அப்பகுதியில் குப்பைகள், கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. இவ்விடயம் குறித்து, மூதூர் பிரதேச சபை சம்மந்தப்பட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அழகான இயற்கை வனப்புமிக்க இப்பகுதியையும் இதன் தனித்துவங்களையும் பாதுகாப்புடன், இந்தச் சூழலின் ரம்மியமான காரணிகளை, உல்லாசப் பயணமாக வரும் மக்கள் கண்டுகளித்து, மனம்மகிழ்ந்து திருப்தியுடன் செல்லும் வழிவகைகளை மூதூர் பிரதேச சபை மேற்கொள்வதுடன், பாலத்தின் தனித்துவம் கெடாமல் புனரமைத்தும் பாதுகாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்.





மாடுமேய்க்க

# எங்கே செல்வது?





சுப்பிரமணியம் பாஸ்கரன்



**வன்னியை பொறுத்த வரையில், கால்நடை வளர்ப்பும் விவசாயமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த வாழ்வாதாரத் தொழில்களாகக் காணப்படுகின்றபோதும், கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகள் இன்மையால் பண்ணையாளர்கள், விவசாயிகள் பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.**

> **கால்நடை வளர்ப்பு என்பது, மாவட்டத்தின் உற்பத்தி, மக்களின் போசாக்கு, குடும்பங்களின் வாழ்வாதாரம் என பல்வேறு விடயங்களில் முக்கிய பங்கினை வகிக்கிறது**

தற்போது காலபோக பயிர்ச் செய்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அவற்றைக் கட்டாக்காலி கால்நடைகளிடமிருந்து பாதுகாத்தல் என்பது விவசாயிகளுக்கு பாரிய பிரச்சினையாகவுள்ளது.

அதேபோன்று, கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச்செய்கை காலங்களில் வீதிகளிலும் பிறஇடங்களிலும் வைத்துப் பராமரிப்பதில் பாரியநெருக்கடிகளை எதிர்கொள்ளவேண்டிய நிலையும் காணப்படுகின்றது.

தற்போது நவீன முறையில், உள்ளக முறைகளில் கால்நடைகளை வளர்ப்பதற்கான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற போதும், அந்த முறைமைக்குள் பண்ணையாளர்கள் உடனடியாக செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. அதாவது, கால்நடை வளர்ப்பில், பாரம்பரிய திறந்த வெளி வளர்ப்பு முறையையே பண்ணையாளர்கள் விரும்புகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் தற்போது இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான கால்நடைகள் உள்ளன. ஆனால், அதற்கான மேச்சல் தரவைகள் என்பது, இதுவரை உருவாக்கப்படவில்லை. இதனை அமைப்பதற்கு அதிகாரிகள் பல முயற்சிகளை எடுத்து வருகின்றபோதும், அது கை கூடுவதாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோகச் செய்கையின்போது, சுமார் 59 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் காலநெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சுமார் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகள், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆடுகள், இவற்றைவிட ஆயிரத்துக்கும் மேற்பட்ட எருமை மாடுகளும் உள்ளன.

இவ்வாறு பயிர் செய்கை காலங்களில், இவற்றை வைத்து பராமரிக்கக்கூடிய மேச்சல் தரவைகள் எவையும் கிளிநொச்சி மாவட்டத்தில இல்லை என்பது வேதனை அளிக்கக்கூடிய செய்தியாகும். இவற்றுக்கான மேச்சல்தரவைகளை அமைப்பதிலும் பாரிய பிரச்சினைகள் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில், கால்நடைகளின் மேச்சல் தரவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள், பல குடியிருப்பு நிலங்களாகவும் பயிர் செய்கை நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இதனால் கால்நடை பண்ணையாளர்கள் பயிர்செய்கை காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களிலும் சிறுபோக செய்கை காலங்களிலும் பயிர்செய்கை மேற்கொள்ளப்படாத வயல் நிலங்களில் வைத்து தமது கால்நடைகளை பராமரித்து வருகின்றனர். ஆனால், காலபோக செய்கை காலங்களில் அவ்வாறு பராமரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான காலப்பகுதிகளில், கால்நடைகளை பெரும் சிரமங்களின் மத்தியில் இடத்துக்கு இடம் மாற்றிமாற்றிப் பராமரித்து வருகின்றனர். இதனால் பல சட்டரீதியான பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேச்சல் தரவைகள் இன்மையால், பயிர்ச்செய்கை காலங்களில் குளங்களின் அலைகரைப்பகுதிகளில் வைத்து, பண்ணையாளர்கள் பராமரித்து வருகின்றபோது, குளங்களின் நீர் மட்டம் அதிகரிக்கும் போது, அவற்றை அங்கிருந்து வெளியேற்றி காடுகளிலும் ஏனைய இடங்களிலும் வைத்து பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறு கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகள் இன்மையால், திறந்தவெளி வளர்ப்பு முறைகளில் கால்நடைகளை வைத்துப் பராமரித்து வரும் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கால்நடை வளர்ப்பு என்பது, மாவட்டத்தின் உற்பத்தி, மக்களின் போசாக்கு அதனை மேற்கொள்ளும் குடும்பங்களின் வாழ்வாதாரம் என பல்வேறு விடயங்களில் முக்கிய பங்கினை வகிப்பதால் இதனை மேம்படுத்த வேண்டிய தேவையே உள்ளது.

இன்று நவீன முறைகளில் உள்ளகவளர்ப்பு முறைகள் பல அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளபோதும் அதற்குள் திடீரென செல்லமுடியாத நிலை காணப்படுகின்றது. அத்துடன் பண்ணையாளர்கள் உள்ளகவளர்ப்பு முறைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய திட்டங்கள் உரியமுறைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

பாரம்பரிய முறையாகவும் பரம்பரை பரம்பரையாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் திறந்த வெளி வளர்ப்பு முறைகளையே மேற்படி பண்ணையாளர்கள் பின்பற்றி வருகின்றனர். எனவே மேற்படி மேச்சல் தரவைகள் மிகமிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றன.

எனவே, மக்களின் வாழ்வாதாரம், போசாக்கு என்பவற்றைக் கருத்திற்கொண்டு, கால்நடைகளுக்கான மேச்சல் தரவைகளை அமைப்பதற்குரிய காணிகளை விடுவித்து, மேச்சல்தரவைகளை அமைத்துத்தருமாறு பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



LK Newspapers Viber Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் சனிக்கிழமை, 16 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.